வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com — மலர் : 05 — 26.04.2024 வெள்ளிக்கிழமை — இதழ் : 117 — பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

# குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முழுமையாக நிராகரிக்கின்றேன்

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

- இரு தரப்புகளின் உண்மைகளை கர்தினாலே மறைக்கிறார்
- விசாரணையை குழப்ப சி. ஐ. டி அதிகாரி நீக்கப்படவில்லை
- இஸ்லாமிய பயங்கரவாதிகளே தாக்குதலை நடத்தினார்கள்

கொழும்பு, ஏப்ரல் 26

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய இரு தரப்புகள் குறித்த உண்மைகளை கர்தினால் மல்கம் ரஞ்சித் மறைக்கிறார் அல்லது வெளிப்படுத்தாமல் தவிர்க்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தலில் ஆற்றிய கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் உரையில், கோட்டாபய

11



## கொக்குவில் ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 26

நிதி மோசடி குற்றச்சாட்டுகளை அடுத்து கொக்குவில் ரயில் நிலையம் தற்காலிகமாக சீல் வைத்து மூடப்பட்டது.

கொக்குவில் ரயில் நிலைய பொறுப்பதிகாரி பணியிலிருந்தபோது சுமார் 20 இலட்சம் ரூபாயை மோசடி செய்துள்ளார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

11

## சஜித்தை படுகொலை செய்ய தேசிய மக்கள் சக்தி முயன்றது

### பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, ஏப். 26

“அறகலய” காலத்தில் சஜித் பிரேமதாஸவை படுகொலை செய்ய தேசிய மக்கள் சக்தி முயற்சித்தது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

மேலும், அறகலயவின்போது தனது ஆதரவு

11

## பாதுகாப்பு தரப்பின் இணக்கத்துடனே ஈஸ்டர் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா?

### அநுரகுமார எம். பி. சந்தேகம்

கொழும்பு, ஏப். 26

பாதுகாப்பு தரப்புகளினதும் தாக்குதல்தாரிகளினதும் பொது இணக்கப்பாட்டுடனேயே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு எதிராக ராஜபக்ஷக்கள் முன்னெடுத்த அரசியல் பிரசாரங்களின் உச்சக்கட்டமாகவே உயிர்த்த ஞாயிறு



11

## ரணிலின் அறிவிப்புக்கு பின்னரே பெரமுன வேட்பாளரை அறிவிக்கும்!

### ஜனாதிபதிக்கு பஸில் உறுதி அளித்தாராம்

கொழும்பு, ஏப். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னரே பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுன நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதியளித்தார் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பஸில் ராஜபக்ஷவும் செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என்ற ரீதியில்

11

## மாணவர்களுக்கு தரமற்ற அரிசி; உலக உணவு திட்டமே வழங்கியது

### கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் சிறுவர்களின் பாவனைக்கு உதவாத அரிசி உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்டதே. அது, அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், அரசாங்கத்துக்கு உதவும் வகையில், அரிசி

11

## 450 கோடி டொலரை முதலிடுகிறது சீனா?

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக 450 கோடி டொலரை சீனா முதலிடலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நடந்தால், இலங்கையில் வெளிநாடு ஒன்று மேற்கொள்ளும் மிகப்பெரிய முதலீடு இதுவாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், இந்த சுத்திகரிப்பு

11

## 5,555 விசாரணைகள் இதுவரையில் பூர்த்தி!

### காணாமல்போனோர் பணிமனை

மட்டக்களப்பு, ஏப். 26

காணாமல்போன ஆட்கள் பற்றிய பணிமனையால் 5 ஆயிரத்து 555 விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 4 ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் இழப்பீட்டு பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று காணால்போன ஆட்கள் பற்றிய பணிமனை தெரிவித்துள்ளது.

நேற்று மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி

11

## கடவுளின் நீதிமன்றத்தில் எவருமே தப்பிக்கமுடியாது

### லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்களின் சாபத்தால்தான் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகினர். கடவுளின் நீதிமன்றத்தில் இருந்து எவரும் தப்பிக்க முடியாது

11

## அரசின் வருமானம் 6 வீதத்தால் வளர்ச்சி!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஏப். 26

நடப்பு ஆண்டின் முதல் காலாண்டில் அரசாங்கத்தின் வருமானம் 6 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

11

## 1,500 குடும்பங்கள் யாழில் இன்னமும் அகதி வாழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 26

போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்தும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1512 குடும்பங்கள் அகதி நிலையிலேயே வாழ்கின்றனர் என்று யாழ். மாவட்டபதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிடமின்றி,

11

# இப்படியும் நடக்கிறது

முல்லைத்தீவு நீதிபதி அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியபோது அவருக்கு ஆதரவாக தொடர்ச்சியான போராட்டங்கள் வடக்கு, கிழக்கு எங்கும் நடைபெற்றன. பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், சட்டத்தரணிகள் அமைப்புகள் நடத்திய போராட்டங்கள் வெற்றியளித்த அளவுக்கு நமது அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் வெற்றியளித்தனவா என்றால் அது கேள்விக்கு உரியது.

அண்மைக் காலங்களில் பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் ஏன் சில தனி நபர்கள்கூட ஏற்பாடு செய்கின்ற போராட்டங்கள் பொது நிகழ்ச்சிகளுக்கு மக்கள் வழங்கும் ஆதரவு அரசியல் கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்களுக்குக் கிடைப்பதில்லை. அண்மைக்காலமாக இதுவே நாம் கண்டுவருவது. தையிட்டி விகாலையில் பிரதி போயா தினங்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டம் நடத்துகின்றனர், ஐவர் அறுவருடன். அதற்கும் ஒரு "திறமை" தேவைதான்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டமாக இருக்கலாம் அல்லது கடைசியாக நடந்த சாந்தனின் இறுதி ஊர்வலமாக இருக்கலாம் இவையெல்லாம் மக்கள் தன்னெழுச்சியாக நடத்தியவை.

இப்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது தொடர்பான யோசனையும் சிவில் சமூக மட்டத்திலிருந்தே முதலில் வந்தது. அதற்கு பின்னர் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தனது தலைமைக்குழுக் கூட்டத்தில் அதுபற்றி பேசியபோதிலும்- கொள்கையளவில் இணக்கம் தெரிவித்த போதிலும் ஐந்து கட்சிகளும் ஒருமித்து, அதனை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றதா என்பது இன்றுவரை கேள்விக்கு உரியதுதான். அந்தக் கூட்டணியின் தலைமை கட்சிகளில் முதன்மையானதான புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் பகிரங்கமாகவே தமிழ் அரசு கட்சியும் இந்த முயற்சியில் வந்தால்தான் அதனை முன்கொண்டு செல்லலாம் என்று தெரிவித்திருந்தார். ஒரு கட்சி இன்னுமொரு கட்சிக்கு இப்படியோர் அங்கீகாரத்தை கொடுப்பது நமது கட்சிகளிடையேதான் நடக்கக்கூடியது.

இந்தக் கூட்டணியின் மற்றுமொரு முக்கிய கட்சியான ரெலோவின் தலைவர் இதுவரை அதற்கு ஆதரவாக பலத்த குரலில் சொல்லியதை நாம் கேட்கவில்லை. ஆனால், கட்சியின் பொதுச்செயலாளரும் மட்டக்களப்பு எம். பியுமான கோவிந்தன் கருணாகரம் மட்டும் பலமாகக் குரல்கொடுக்கின்றார். ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் சுரேஷ் பிறேமச்சந்திரன் மட்டுமே தொடர்ச்சியாக அதற்கு ஆதரவாக குரல்கொடுத்து வருகின்றார். அவரும்கூட, இந்த பொதுவேட்பாளர் தொடர்பான விடயத்தில் ஒரு தெளிந்த முடிவோடு இருக்கிறாரா அல்லது இதனை ஒரு பேரம் பேசலுக்கான ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்ற யோசனையில் இருக்கின்றாரா என்பதில் தெளிவிருப்பதாக தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கட்சியின் சிறீகாந்தா உறுதியாக இந்த விடயத்தில் கருத்துச் சொல்லி வருகின்றார்.

கடந்த பத்தொன்பதாம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறு பொது வேட்பாளரை களம் இறக்குவது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவை ஒரு முயற்சியை செய்த போதிலும் போதிய காலஅவகாசத்தில் அதனை முன்னெடுக்காததாலும் அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவு வழங்காததாலுமே அது சாத்தியமற்றுப்போயிற்று.

ஆனால், இப்போது அப்படியல்ல. இந்த விடயம் குறித்து இப்போது தமிழ் அரசியல் பரப்பில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்துவருகின்றன. இந்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதில் தமிழ் மக்களிடையே ஒரு பரவலான ஆதரவு கிடைத்து வருவதாகத் தெரிகின்றது.

இந்த நிலையில், வழக்கம்போல அரசியல் கட்சிகளின் ஆதரவையும் அவர்களின் விருப்பு வெறுப்புகளையும் எதிர்பார்த்துக்கொண்டு காலத்தைக் கடத்தாமல், இந்த விடயத்தை சிவில் அமைப்புகளும் புத்திஜீவிகளும் சமூக ஆர்வலர்களும் ஓர் அணியாக இணைந்து இதனை முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதற்கான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவேண்டும். தமிழ் மக்களின் அரசியல் முடிவுகளை தாங்கள்தான் எடுக்கமுடியும் என்று சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இப்போதும் விறுமாப்புடன் பேசிக்கொண்டிருக்கின்றனர். ஒரு கட்சிக்குள்ளேயே பல கருத்துகள் மேலெழுகின்றன. பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சிலரும் அதற்கு எதிராக இன்னும் சிலரும் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதில் வேறு சிலரும் ஒரு கட்சிக்குள்ளேயே பல கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதிலும் சிலர் தத்தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை பொது வெளியில் சொல்லி வருகின்றனர். அவை தமது தனிப்பட்ட கருத்துகள்தான் என்பதையும் கட்சியாக என்ன முடிவெடுத்தாலும் அதற்கு ஆதரவாக தாம் இருப்போம் என்பதையும்கூட சொல்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. அப்படியொரு கட்டுக்கோப்புடன் இதுவரை எந்த தமிழ் அரசியல் கட்சியும் இருந்ததாகவும் தெரியவில்லை.

கடைசியாக பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில்கூட, கட்சியின் முடிவுக்கு அமையத்தான் அனைவரும் வாக்களித்ததாகவும் தெரியவில்லை. இந்நிரலில், இந்த முயற்சிக்கு - அதாவது பொது வேட்பாளர் என்ற யோசனையை தொடர்ந்து முன்கொண்டுசெல்லவும், அதனை செயல்படுத்தவும் சிவில் அமைப்புகளும், சமூக அமைப்புகளும் ஏன் தனிப்பட்ட ரீதியில் புத்திஜீவிகள், மத தலைவர்களும் இணைந்து ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டியது இப்போது அவசியமானது. அவர்கள் பின்னால் அதற்கு ஆதரவான கட்சிகள் தலைவர்களும் நிற்கலாம்.

- ஊர்க்குருவி.

## வவுனியா கடவுச்சீட்டு பணிமனை முன்பாக கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஏப். 26

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு பணிமனை முன்பாக நேற்று காலை பொலிஸார் முன்னெடுத்த திடீர் சோத னையில் கஞ்சா வைத்திருந்தவர் சிக்கினார்.

கைதான நபரிடமிருந்து 10 கிராம் கஞ்சா மீட்டனர். இதனை அவர் விற்பனைக்காகவா அல்லது பாவனைக்காகவா வைத்திருந்தார் என்ற கோணத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கைதான சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வான் பாலம் கொண்ட ஹோட்டலை திறந்து வைத்தார் ஜனாதிபதி ரணில்!





கொழும்பு, ஏப். 26

இலங்கையின் கலை கலாசாரங்களை உள்ளடக்கிய முதலாவது வான் பாலம் சொகுசு ஹோட்டல் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் ஐ. ரி. சி. ஹோட்டல் குழுமத்தின் 500 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவுக்கு வெளியில் உள்ள நாடுகளில் ஐ. ரி. சி. ஹோட்டல் குழுமத்தி ஹீனால் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரிய நிதி முதலீட்டு திட்டமாகும்.

கொழும்பு காலி முகத்திடல் பகுதியில் அமைந்துள்ள இந்த ஹோட்டலின் முகப்பு பகுதியில் இந்து சமுத்திரமும் பின்புறப் பகுதி பேரவாவியும் அமைந்து காணப்படுவது இயற்கை அழகுடன் அமைந்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் கொள்கைக்கு அமைய இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நிலைபேண்தகு அபிவிருத்தி, மீள் சுழற்சி போன்ற முக்கிய நோக்கங்களை முன்வைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த ஹோட்டலில் 352 விருந்தினர் அறைகள், 9 உணவகங்கள், வரவேற்பு மண்டபங்கள் காணப்படுகின்றன.

இரு கோபுரங்களை கொண்ட கொழும்பு நகரத்தின் முக்கிய அடையாளமாகவுள்ள நிலையில், அதன் 140 மீற்றர் உயரமான கோபுரம் ஹோட்டலுடன் சேர்ந்தும் 224 மீற்றர் உயரமான கோபுரம் குடியிருப்பு தொகுதியையும் கொண்டுள்ளது - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'தராக்கி' சிவராமின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல்!

வடமராட்சி, ஏப். 26

ஊடகவியலாளர் 'தராக்கி' என்று அழைக்கப்பட்ட சிவராமின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி ஊடக இல்லத்தின் தலைவர் கு. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், வடமராட்சி ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்கவுள்ளனர். (ஐ-02)

## எழுத்தாளர் கைதானார்

கொழும்பு, ஏப். 26

10 இலட்சம் ரூபாய் நிதி மோசடி தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரபல எழுத்தாளர் உபுல் சாந்த சன்னஸ்கல பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கைது செய்யப்பட்டு வெலிசர நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். (ஐ)

## ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேர வையின் மாதாந்த ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் 316 ஆவது இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரமத்தின் முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டு ரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் க. சிறீஸ்கந்தராசாவும் மதிப்பீட்டுரையை சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராசாவும் வழங்குவர். (ஐ-02)

## அனந்த நாராயணனுக்கு கலாவித்தகர் பட்டம்




யாழ்ப்பாணம், ஏப். 26

வட இலங்கை சங்கீத சபையின் 25 ஆவது பட்ட மளிப்பு விழாவில் ஏ. ஜி. எஸ். அனந்த நாராயணன் சர்மாவுக்கு மிருதங்க கலா வித்தகர் பட்டம் வழங்கப்பட்டது.

அனந்த நாராயணன் மிருதங்க வித்துவான் 'கலா பூஷணம்' ஏ. கணேஷ சர்மாவின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.04.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல்வாதிகளின் அச்சம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் நிலைப்பாட்டை கொள்கையளவில் ஆதரிப்பதாக சில கட்சிகள் கூறுகின்றன. அந்த அடிப்படையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதன் ஆதரவு நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தது. ஆனால், அந்தக் கூட்டணியை சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் சிலர் தங்கள் தீர்மானத்தின் மீதான சந்தேகங்களையும் பொதுவெளிகளில் முன்வைத்து வருகின்றனர். இலங்கை தமிழ் அரசு கட்சியை பொறுத்தவரையில் ஒரு பகுதியினர் குறிப்பாக சிறீதரனும் அவரின் ஆதரவாளர்களும் ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். மறுபுறம் சுமந்திரனும் அவரின் ஆதரவாளர்களும் எதிரான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் கூறும் காரணம், இது தென்பகுதியில் இனவாதத்தை கிளப்பும் என்பதாகும். தர்க்கரீதியில் இது மிகவும் பலவீனமான வாதமாகும். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தாவிட்டால் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கான ஆதரவான நிலைப்பாடா வெளிக்கிளம்பும்? தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எந்தவொரு தென்னிலங்கை கட்சிகளும் வெளிப்படுத்தாமையால்தானே தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் தொடர்பில் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

இன்னொரு பகுதியினர் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் சாத்தியப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், மக்கள் வாக்களிக்காது விட்டால் என்ன செய்வது? மக்களின்மீதான சந்தேகமே அவர்களை பின்வாங்க செய்வதாக அவர்கள் விளக்கமளிக்க முற்படுகின்றனர். இதுவும் அடிப்படையிலேயே தவறானது. ஏனெனில், மக்களை ஒரு விடயத்தை நோக்கி அணிதிரட்டுவதுதான் அரசியல் தலைமைகளின் பிரதான பணியாகும். ஆனால், அதனை செய்வதற்கு அஞ்சி மக்கள்மீது சந்தேகம் வெளியிடுகின்றார்கள் என்றால் அது அவர்களின் இயலாமைக்கு சான்றாகும்.

வரலாற்று ரீதியாக மக்கள் அரசியல் கட்சிகள் காண்பித்த திசைவழியிலேயே சென்றிருக்கின்றனர். அது சரியா அல்லது தவறா என்று மக்கள் ஆராயவில்லை. 2010இல், சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கூறியபோது மக்கள் வாக்களித்தனர். அப்போது, யாரும் மக்கள்மீது சந்தேகம் வெளியிடவில்லை. 2015இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு கூறப்பட்டபோதும் மக்கள் ஏன் என்று கேட்கவில்லை. வாக்களித்தனர். அப்போது மக்கள்மீது எவருமே சந்தேகம் கொள்ளவில்லை.

2020இல் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு கேட்கப்பட்டபோதும் மக்கள் வாக்களித்தனர். எவருமே மக்கள்மீது சந்தேகம் வெளியிடவில்லை. ஒரு தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்த வேண்டுமென்று கூறுகின்ற போதுதான் தமிழ் மக்களின் நேர்மை தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. இது உண்மையில் சந்தேகமா அல்லது மக்கள்மீதான அச்சமா? ஒரு தமிழ்த் தேசியவாத அலை உருவாகிவிடுமென்று சில அரசியல்வாதிகள் அச்சப்படுகின்றனரா? அதுதான் அவர்கள் தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாட்டை எதிர்க்கின்றனரா?

# தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கு ஜூனுக்கு ஒத்திவைப்பு!

*யாழ்ப்பாணம், ஏப். 26*

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூன் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் நேற்றும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்பு கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி ந. சிறீகாந்தா தங்கள் தரப்பு கருத்துகளை முன்வைக்க கால அவகாசம் கோரினார்.

இதனையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்க அவகாசம் வழங்கி ஜூன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வேலையற்ற பட்டதாரிகள் திங்களன்று போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஏப். 26*

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வேலையற்ற பட்டாதாரிகள் சம்நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

எங்களால் மேற்கொள்ளப்படவுள்ள ஜனநாயக அடிப்படையிலான போராட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதுடன் எங்களின் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

நாடு தழுவியரீதியில் பட்டதாரிகள் அனைவரும் ஜனநாயக அடிப்படையில் அமைதியான போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் வட மாகாண பட்டதாரிகளாகிய நாமும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்பை மேற்கொள்ளவுள்ளோம்.

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் போட்டிப்பரீட்சைகள் நிராகரிப்பு செய்ய வேண்டும், ஏற்கனவே அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீண்டும் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் கொண்டு வருதல் நியாயமற்றது. அது வேலையற்ற பட்டதாரிகளை பாதிக்கின்றது, வட மாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய பட்டதாரிகளின் வாழ்வியல் தொடர்பிலான அரசாங்கத்தின் கரிசனை என்ன?, வேலையற்ற பட்டதாரிகளும் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமானங்களும் சவால்களும் அதன் ஊடாக ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் பட்டதாரிகளின் எதிர்காலம் குறித்தும் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்? - இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தை நடத்தவுள்ளோம் - என்று தெரிவித்தனர். (ஐ)

## நாடகமும் அரங்கியலும் தொழில் தகைமை பயிற்சி

*யாழ்ப்பாணம், ஏப். 26*

நாடகமும் அரங்கியலும் தேசிய தொழில் தகைமை பயிற்சிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று ரவர் மண்டப அரங்க மன்றத்தின் பணிப்பாளர் ஜெயபிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் நாடக கலைஞர்களின் தொழில் தகைமையை மேம்படுத்தும் முகமாக செயல்திட்டம் எதிர்வரும் மாதம் முதல் விண்ணப்பதாரிகளை உள்ளீர்க்கும் செயல்பாடு ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி வியப்பார். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைகூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

# பிரதமர் மோடியை கண்டித்து சென்னையில் போராட்டம்!

சென்னை, ஏப். 26

மத வெறுப்பு பிரசாரத்தில் ஈடுபட்ட மோடி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சென்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராஜஸ்தானில் நடந்த தேர்தல் பிரசாரத்தின்போது இஸ்லாமியர்களுக்கு எதிராக வெறுப்பூட்டும் வகையிலும், நாட்டு மக்களிடையே மத ரீதியான பிளவை ஏற்படுத்தும் வகையிலும் பிரதமர் மோடி பேசியுள்ளார். அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. (ஐ)



# ம. தி. மு. க.மீதான வழக்கை 4 மாதங்களில் முடிக்க உத்தரவு

சென்னை, ஏப். 26

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு எதிரான வழக்கு விசாரணையை நான்கு மாதங்களில் முடிக்க வேண்டும் என்று திண்டுக்கல் நீதிமன்றத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016 பெப்ரவரி 21ஆம் திகதி திண்டுக்கல்லில் ம. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் நடத்தப்பட்டது. அனுமதிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி கூட்டத்தை நடத்தியதாகக் கூறி, கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ, திண்டுக்கல் மாவட்ட செயலாளர் செல்வராகவன் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இழுபறியிலுள்ள இந்த வழக்கு தொடர்பில் சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, இந்த வழக்கு விசாரணையை நான்கு மாதங்களில் முடிக்க வேண்டும் என திண்டுக்கல் நீதிமன்றத்துக்கு உத்தரவிடப்பட்டது. (ஐ)

# உயிருக்கு ஆபத்தான உணவு விற்போருக்கு 10 ஆண்டு சிறை

சென்னை, ஏப். 26

உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் நச்சு இரசாயனங்கள் கொண்ட உணவுப் பொருள்களை விற்பனை செய்தால் அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று உணவுப் பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது.

திரவ நைரசனில் தயாரான உணவுப் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. திரவ நைதரசன் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவை. அதில் உள்ள வேதிசேர்மங்கள் சுவாசப்பாதை, உணவுப் பாதைக்குள் குளிர் உறை நிலையை ஏற்படுத்தி விடும்.

எனவே, எந்த உணவுப் பொருளுடனும் திரவ நைதரசனை சேர்க்கக் கூடாது. இதுபோன்ற உணவு வகைகள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தவல்லவை. எனவே, இதனை விற்றால் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் - என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# வட மாநிலங்களில் ஸ்டாலின் பிரசாரம்

சென்னை, ஏப். 26

வட மாநிலங்களில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் ஸ்டாலின் பிரசாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகம், புதுச்சேரியின் 40 தொகுதிகளிலும் தி. மு. க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக முதல்வர் ஸ்டாலின் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இதேபோல, கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாக்கு சேகரித்தனர்.

தமிழகத்தில் வாக்குப்பதிவு முடிந்துள்ள நிலையில், கடந்த சில நாட்களாக சென்னை அண்ணா அறிவாலயத்தில், முதல்வர் ஸ்டாலினை திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி வேட்பாளர்கள், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து பேசி வருகின்றனர்.

இதன்போது, வடமாநிலங்களில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. (ஐ)

# காங்கிரஸில் இணைகிறார் மன்சூர் அலிகான்



சென்னை, ஏப். 26

இந்திய ஜனநாயக புலிகள் என்ற கட்சியை தொடங்கிய நடிகர் மன்சூர் அலிகான் நடைபெற்றுவரும் பாராளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டார்.

இந்த நிலையில், சென்னை சத்யமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகையை நேற்று சந்தித்து கட்சியில் சேர்வதற்கான விண்ணப்பக் கடிதத்தை வழங்கினார்.

இதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய மன்சூர் அலிகான்,

காங்கிரஸ் கட்சியில் இணைவதற்கு கடிதம் கொடுத்துள்ளேன். முதலில் காங்கிரஸ் கட்சியில் தான் இருந்தேன். மீண்டும் தாய் கட்சியில் இணைய உள்ளேன். இந்திய ஜனநாயக புலிகள் கட்சியை காங்கிரஸுடன் இணைக்க முடிவு செய்துள்ளேன். பிரதமர் மோடியை ஒரு சாதாரண குடிமகனாக கைது செய்து திகார் சிறையில் அடைக்க வேண்டும் - என்றார்.

# வெடுக்குநாறிமலையில் கைதான எவரையும் தாக்கவில்லையாம்!

## பொலிஸார் வாக்குமூலத்தில் தெரிவிப்பு

வவுனியா, ஏப். 26

**வெடுக்குநாறிமலையில் கைதான எவரையும் தாம் தாக்கவில்லை என்றும் அரைநிர்வாண நிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.**

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு நெடுங்கேணிப் பொலிஸ், வனவள திணைக்கள அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிமனையில் இந்த விசாரணைகள் நடைபெற்றன.

வனவளத் திணைக்களத்தினர் வழங்கிய வாக்குமூலத்தில்,

தாம் அங்கு சென்றபோது வனப் பகுதியில் தீ மூட்டப்பட்டிருந்தது. பிளாஸ்ரிக் பொருட்கள், சமையல் கழிவுகள் ஆலய பூசைப்பொருட்கள் கொட்டப்பட்டிருந்தன என்று கூறியிருந்தனர்.

பொலிஸார் அளித்த வாக்குமூலத்தில்,

தொல்பொருள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரமும் வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டமை காரணமாகவும் தாம் அவர்களை கைது செய்தனர் என்று கூறினர். அத்துடன், எவரையும் தாக்கவில்லை, யாரையும் அரைநிர்வாண நிலையில் கைது செய்யவில்லை என்று கூறினர்.

சிவராத்திரி தினமான கடந்த 8ஆம் திகதி பொலிஸார் வெடுக்குநாறிமலையில் கூடியவர்களில் 8 பேரை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிவனொளிபாத மலையிலிருந்து கீழே குதித்த இளைஞர் மீட்பு!




கொழும்பு, ஏப். 26

சிவனொளிபாத மலையில் உச்சியில் இருந்து கீழே குதித்து காணாமல் போயிருந்த சூரிய வெவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான தினேஷ் ஹேமந்த என்ற இளைஞர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிவனொளிபாத மலை வனப் பகுதிக்கு அருகில் உள்ள நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரே தோட்டத்தின் ராஜமலை பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இளைஞன் கண்டு பிடிக்கப்பட்டு தோட்ட தொழிலாளர்களால் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து மஸ்கெலிய மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## நோய்க்கு மருந்து பெறாமல்

# தேவாலயத்தின் புனித நீரை பருகிய பெண் உயிரிழப்பு!

சிலாபம், ஏப். 06

நோய்க்கு மருந்து பெறாது வாலயத்தில் வழங்கப்பட்ட புனித நீரை அருந்திய பெண் திடீரென சுகவீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் புத்தளம் - சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாவார்.

இவர் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். தீவிர இறைநம்பிக்கை கொண்ட அவர் நோய்க்கு மருந்து பெற்றுக் கொள்ளவில்லை. தேவாலயத்தில் மத குரு வழங்கிய புனித நீரை பருகியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அவர் திடீரென சுகவீனமடைந்து புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் அங்கு உயிரிழந்தார்.

மதுரங்குளி பொலிஸார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பால்மாவின் விலை குறைப்பு; இறுதி முடிவு இன்னும் இல்லை!

கொழும்பு, ஏப். 26

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை குறைப்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கூட்டம் இதுவரையில் நடத்தப்படவில்லை என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மார்ச் மாதத்தில் ஒரு கிலோ பால் மா பக்கற்றின் விலை 150 ரூபாவாலும், 400 கிராம் பால் மா பக்கற்றின் விலை 60 ரூபாவாலும் இறக்குமதியாளர்கள் குறைத்தனர்.

விலை குறைப்பை தொடர்ந்து, இறக்குமதி செய்யப்பட்ட பால் மா பக்கற்றுக்கள் உள்ளூர் சந்தையில் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில் இன்று (நேற்று) முதல் மீண்டும் விலையை குறைப்பதற்கு நியூசிலாந்தில் இருந்து பால் மாவை இறக்குமதி செய்யும் நிறுவனம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ பால் மா பைக்கெற்றின் விலை 250 ரூபாவாலும், 400 கிராம் பால் மா பைக்கெற்றின் விலை 100 முதல் 140 ரூபாவாலும் குறைக்கப்படும் என்று கூறப்பட்டது.

எனினும், மேற்படி அறிக்கையுடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# பிறிக்ஸ் கூட்டணியில் இலங்கை இணைவதற்கு சீனா உதவ வேண்டும்!

## சீன அமைச்சரிடம் மனோ எம். பி.

கொழும்பு, ஏப். 26

பிரிக்ஸ் கூட்டணியில் இலங்கையை இணைப்பதற்கு சீன அரசு உதவவேண்டுமென சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அமைச்சரான சன் ஹையானிடம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வேண்டுகொள் விடுத்துள்ளார்.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழு உறுப்பினரும், துணை அமைச்சருமான சன் ஹையா



னுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்.

இன்று உலக பொருளாதாரம் ஆசியாவை மையமாக கொண்டுள்ளது. இங்கே சீனா தலைமை பாத்திரம் வகிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, சீனா, இந்தியா, ரஷ்யா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளின் 'பிரிக்ஸ்' என்ற கூட்டமைப்பு உருவாகி உள்ளது.

இந்த பிரபல பிரிக்ஸ் கூட்டமைப்பில் இலங்கையும் எதிர் காலத்தில் இடம்பெற சீனா உதவிட வேண்டும் - என்றார். (ஐ)

# இலங்கை வந்த ஈரான் ஜனாதிபதி புறப்பட்டார்

கொழும்பு, ஏப். 26

ஒருநாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மீண்டும் ஈரான் நோக்கி புறப்பட்டார்.

ஈரானுக்கு சொந்தமான விசேட விமானம் மூலம் அவர் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்றார்.

நேற்றுமுன்தினம் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை திறந்து வைப்பதற்காக அவர் இலங்கைக்கு வருகை தந்தார்.

இதேவேளை, ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓ. எல். பரீட்சைக்கான வகுப்புகளை 30ஆம் திகதியுடன் நிறுத்தவேண்டும்!

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 26

க. பொ. த. சாதாரண தர பரீட்சைகளை இலக்காக கொண்ட மேலதிக வகுப்புகள், விசேட கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பன எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் இடைநிறுத்தப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சாதாரண தர பரீட்சைகள் இடம் பெறவுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, விதிகளை மீறி மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகளை நடத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் மே மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# சுண்டுக்குளி சுற்றிவளைப்பில் பெண்கள் உட்பட ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த சுண்டுக்குளி பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இயங்கி வந்த விடுதி முற்றுகையிடப்பட்டு ஐவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 4 பெண்களும், விடுதியின் உரிமையாளரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு



# நாடு முழுவதும் ஆயுதமேந்திய படையினரை களமிறக்க உத்தரவு

கொழும்பு, ஏப். 26

**நாட்டின் பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய படையினர் அனைவரையும் அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

நேற்று காலை 9.30 மணிக்கு பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதைத் தொடர்ந்து சபாநாயகர் இந்த உத்தரவை சபைக்கு அறிவித்தார்.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஐ)

# போதைப்பொருட்களுடன் புதனன்று 632 பேர் கைது!

கொழும்பு, ஏப். 26

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப்பொருட்களுடன் 10 பெண்கள் உட்பட 632 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான 9 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 118 கிராம் ஹெரோயின்,, 255 கிராம் கஞ்சா , 125 கிராம் ஐஸ் மற்றும் 529 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# அமரவீரவிடம் 1,000 மில். ரூபாய் இழப்பீடு கோருகிறார் மைத்திரி

கொழும்பு, ஏப். 26

ஊடகங்கள் ஊடாக வெளியிட்ட அறிக்கையால் ஏற்பட்ட அவமதிப்புக்காக தனக்கு இழப்பீடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு சட்டத்தரணி ஊடாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு 1,000 மில்லியன் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை 14 நாட்களுக்குள் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நடந்துசென்ற இளைஞர் வான் மோதியதில் பலி!

சிலாபம், ஏப். 26

வீதியில் நடந்து சென்ற இளைஞரை வான் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புத்தளம் - மதுரங்குளிய - முக்குதொடுவ பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞரே உயிரிழந்தார்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வான் ஒன்று பாதையில் நடந்து சென்ற குறித்த இளைஞனை மோதியதாகக் கூறப்படுகின்றது.

ஹோட்டலில் தங்கியிருந்த இளைஞரே உயிரிழந்தார். மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அரசின் அரிசி வழங்கும் திட்டத்தில் காலாவதியான அரிசி விநியோகம்!

முல்லைத்தீவு, ஏப். 26

அரச மானிய நிகழ்ச்சித் திட்டம் மூலம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கு காலாவதியான அரிசி பொதி வழங்கப்பட்டுள்ளது.

அரச மானியம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது மக்களுக்கு அரிசி பொதி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்டு வாழும் மக்களுக்கு காலாவதியான அரிசி பொதிகளே வழங்கப்பட்டுள்ளன.

அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி பொதியில் 2024.03.25 என காலாவதி திகதி அச்சிடப்பட்டிருக்கிறது. அத்தோடு வழங்கப்பட்ட பொதிகளில் இருந்த அரிசியும் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.




இந்த விடயம் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகளிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்தது. இதையடுத்து, பழுதடைந்த அரிசியை மீளப்பெற்று அந்தக் குடும்பங்களுக்கு தரமான அரிசி மாற்றி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# மின்சார திருத்த சட்ட மூலம் பாராளுமன்றில்



கொழும்பு, ஏப். 26

உத்தேச மின்சாரத்துறை திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றில் முன்வைத்தார்.

உத்தேச மின்சாரத்துறை சீர்திருத்தங்கள் இலங்கை மின்சார சட்டமூலமாக மாற்றப்பட்டு கடந்த 17ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இதற்கமைய, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு அதன் சட்டபூர்வ தன்மையை உயர் நீதிமன்றத்தில் பொதுமக்களால் சவாலுக்கு உட்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறையில் மரக்கறி சந்தைக்கு அடிக்கல் நாட்டல்

வடமராட்சி, ஏப். 26

பருத்தித்துறை நகர சபையால் புதிய மரக்கறி சந்தைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


சமய கிரியைகளுடன் ஆரம்பமான நிகழ்வில் பருத்தித்துறை நகர சபை வருமான வரி பிரிவு கிளைத் தலைவர் தி.சிவநேசன் மரக்கறி சந்தைக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

51 மில்லியன் ரூபாய் செலவில் மரக்கறி சந்தை அமைக்கப்படவுள்ளது.



ஆரம்பநிகழ்வில், பருத்தித்துறை நகர சபையின் நிர்வாக பொறுப்பு அதிகாரி, நிரஞ்சனி உமாகாந்தன், பிரதம பொது முகாமைத்துவ அதிகாரி கமலினி உதய சேகரன், உள்ளூராட்சி உதவியாளர் தாரணி மதியழகன், கணக்கு பதிவு அதிகாரி செபஸ்தியாம்பிள்ளை ராஸ்குமார் உட்பட பருத்தித்துறை நகரசபை அதிகாரிகள் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 02)

# நுவரெலியாவில் கடும் வறட்சி நீர்த்தேக்கங்கள் வற்றுகின்றன



ஹற்றன், ஏப். 26

கடந்த இரண்டு மாதங்களாக நீடிக்கும் வறட்சியால் நுவரெலியாவில் பல நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது.

இதன் காரணமாக மஸ்கெலியா மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் சுமார் 45 அடி குறைந்துள்ளது.

நீர் தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்துள்ளதால் 1968ஆம் ஆண்டில் நீரில் மூழ்கிய அனைத்து வணக்க ஸ்தலங்களையும் தற்போது பார்க்கக்கூடியதாகவுள்ளது.

சண்முக நாதர் ஆலயம், பௌத்த விகாரையில் இருந்த புத்தரின் சிலை, அதன் அருகில் இருந்த போதி மரம், இஸ்லாமிய பள்ளியின் தூபி மற்றும் கங்கேவத்தை நகரில் இருந்த சித்தி விநாயகர் ஆலயம் என்பன வற்றுடன் வெள்ளையர்களால் கட்டப்பட்ட பாலம் என்பன தற்போது பார்க்க கூடிய அளவில் உள்ளது.

காசல்ரீ, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. (ஐ)

# 2000 தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி!

கொழும்பு, ஏப். 26

லங்கா சதொச ஊடாக இந்தியாவில் இருந்து 2,000 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதிக்கான நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன என்று அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா விதித்திருந்த தடை இலங்கைக்கு மாத்திரம் உத்தியோகபூர்வமாக நீக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அண்மையில் அறிவித்திருந்தது.

# பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை திருடியவர் கைது!

கொழும்பு, ஏப். 26

மாத்தளை, வில்கமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியைத் திருடினார் என்று கூறப்படும் சந்தேக நபரொருவர் வில்கமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் அரலகங்வில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வில்கமுவ, நுககொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபராவார்.

இவர் திருடினார் என்று கூறப்படும் துப்பாக்கியானது நுககொல்ல பிரதேசத்தில் உள்ள புத்தர் சிலை அருகே மீட்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் வில்கமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெடிபொருட்கள் நிரப்பிய லொறியை சோதனை செய்ய தடை விதித்தது ஏன்?

## பொலிஸ்மா அதிபரிடம் காவிந்த எம். பி. கேள்வி

கொழும்பு, ஏப். 26

**களனி கம பகுதியில் வெடி பொருட்கள் நிரப்பிய லொறியைச் சோதனை செய்ய பொலி ஸார் முற்படுகையில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் அதற்குத் தடை விதித்து வாகனத்தை விடுவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். - இவ் வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல கேள்விகளுக்கு இதுவரை பதில் கிடைக்க வில்லை. பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை உரிய விசாரணைகள் இடம்பெறாது. நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்றும் காவிந்த எம். பி. குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன் கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்த சபை ஒத்தி வைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இது வரை நீதி கிடைக்கவில்லை. 277 பேர் உயிரிழந்ததுடன், 500 பேர் படுகாயமடைந்தனர். குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் நிறைவடைந்து விட்டதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் எவருக்கும் தண்டனை வழங்கப்பட வில்லை.

அரச மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அறிந்திருந்த நிலையில் தான் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் முற்போக்கான சிந்தனையால் தவறான தீர்மானத்தை எடுத்து தற்கொலைக் குண்டுதாரிகளாக தங்களை மாய்த்துக் கொண்டனர். இதனைச் சாதகமாகக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார்.

மாத்தளை பகுதியில் பொடி சஹ்ரான் என்று குறிப்பிடப்படும் நபருடன் பொலிஸ் பரிசோதகர் பண்டார என்பவர் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளார். தாக்குதல் இடம்பெற்றவுடன், தாக்குதலை ஐ. எஸ். ஐ. எஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்குமாறு இவர் அழுத்தம் பிரயோகித்துள்ளார்.

வெடிப்பொருட்கள் அடங்கிய லொறி 2019. 04. 05 ஆம் திகதி அதிகாலை 03 மணிக்கு களனி கம பகுதியில் செல்லும் போது அப்பகுதியில் வீதிப் பாதுகாப்பில் இருந்த ரத்நாயக்க என்பவர் வாகனத்தை சோதனை செய்ய முற்படுகையில் தற்போதைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொலைபேசி அழைப்பை எடுத்து அந்த வாகனத்தை விடுவிக்குமாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அந்த பொலிஸ் அதிகாரி 2019.04.05 ஆம் திகதி அதிகாலை 03.10 மணிக்கு பதிவுப் புத்தகத்தில் 333 பக்கத்தில் 92 ஆவது பந்தியில் பதிவிட்டுள்ளார்.




சந்தேகத்துக்கிடமான வாகனத்தை பரிசோதனை செய்ய வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் ஏன் குறிப்பிட வேண்டும். அந்த வாகனத்தை விடுவிக்குமாறு அவருக்கு யார் ஆலோசனை வழங்கியது. பல கேள்விகளுக்கு இன்று வரை பதில் கிடைக்கவில்லை. பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அதிகாரத்தில் இருக்கும் போது முறையான விசாரணைகள் இடம் பெறாது. எமது அரசாங்கத்தில் ஆரம்பத்திலிருந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும். அதுவரை போராடுவோம். - என்றார். (எ)

நிதி மோடி குற்றச்சாட்டு

# மஹிந்தானந்தவுக்கு எதிராக இம்மாதம் 30 ஆம் திகதி தீர்ப்பு

கொழும்பு, ஏப். 26

சட்டவிரோதமாக பெற்றுக் கொண்ட 27 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான செலவில் கொழும்பு கின்சி வீதியில் சொகுசு வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தார் என நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 30 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படவிருந்தது. ஆனால், இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 30 ஆம் திகதி அறிவிக்கப்படும் என உயர் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மஹரசிங்க தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டை அடிப்படையாகக் கொண்டு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகச் சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 13 வயது சிறுவனின் தலையில் தாக்கிய பொலிஸ் பரிசோதகர்!

மாத்தளை, ஏப். 26

13 வயதுச் சிறுவனின் தலையில் பலமாகத் தாக்கியதாகக் கூறப்படும் உபபொலிஸ் பரிசோதகர் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் முறைப்பாடு செய்துள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை - யடவத்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் மீதே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் பந்தயத்துக்காக துவிச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்றதாகக் கூறி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலையடுத்து வீடு திரும்பிய சிறுவன் திடீரென சுகவீனமுற்று தரையில் மயங்கி வீழ்ந்ததாகவும் சிறுவனின் தாய் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# விகாராதிபதியை கைது செய்ய அமைச்சர் மனுஷ பணிப்புரை!

அநுராதபுரம், ஏப். 26

அநுராதபுரத்திலுள்ள விகாரை ஒன்றின் விகாராதிபதி, பொலிஸ் சார்ஜன்ட் உள்ளிட்ட குழுவினர் வெளிநாட்டு வேலை வாய்ப்பை வழங்குவதாகக்கூறி பணம் வசூலித்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இந்த முறைப்பாட்டுடன் தொடர்புடைய தரப்பினரை கைது செய்யுமாறு விசாரணைக் குழுக்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தைத் தவிர வேறு எந்தத் தரப்பினருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பணத்தைப் பெறும் அதிகாரம் இல்லை.



இதேவேளை, வெளிநாட்டு வேலைகளை வழங்குவதாகக் கூறி சட்டவிரோதமான முறையில் பணத்தை பெறுக்கொள்ளும் ஆட்கடத்தல்காரர்களைக் கைது செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணை பிரிவுக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.

இவ்வாறு பணம் பெறும் மோசடிகளைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் விசாரணைகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு சகல வசதிகளையும் வழங்குமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உயர் நிர்வாகத்துள்கு அறிவித்துள்ளார். (எ)

# அ'புரத்தில் வங்கியில் திருட்டு முயற்சி சமிக்ஞை கட்டமைப்பினால் தோல்வி!






அநுராதபுரம், ஏப். 26

அநுராதபுரம் நகரிலுள்ள அரச வங்கி ஒன்றில் பணத்தைத் திருட வந்த குழு அல்லது நபர் வங்கியின் சமிக்ஞை கட்டமைப்பு செயல்படுத்தப்பட்டதையடுத்து திருடுவதைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொது வர்த்தக நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள அரசாங்க வங்கி ஒன்றின் மேற்கூரையின் ஒரு பகுதியை அகற்றி வங்கிக்குள் நுழைந்து பெட்டகத்தை உடைத்து பணத்தைத் திருடிச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சியே தோல்வியடைந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வங்கிக் கட்டடத்தின் மேற்கூரையில் இருந்து ஒருவர் அல்லது பலர் கயிற்றின் உதவியுடன் கீழே இறங்கி பெட்டகத்தை உடைத்தபோது வங்கியின் சமிக்ஞை கட்டமைப்பு திடீரென செயல்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடைக்கப்பட்ட பெட்டகத்தில் பணம் எதுவும் வைக்கப்படவில்லை என்பது தெரியவந்ததாக பொலிஸார் கூறினர். (எ)

# ரயில் படிக்கட்டில் தொங்கியபடி பயணிப்பதற்கு அனுமதி இல்லை

கொழும்பு, ஏப். 26

ரயிலின் படிக்கட்டுகளில் தொங்கிய படி செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக மலையகத்துக்கு செல்லும் ரயில்களின் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிப்பதால் பல விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண பயணிகள் ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், மலையக ரயில் மார்க்கத்தில் கடுகதி ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் விபத்துக்கள் ஏற்படுவது கவலையளிக்கிறது.

ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிக்க வேண்டாம் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் அறிவித்தாலும், சுற்றுலாப் பயணிகள் அவ்வாறு செல்வதைத் தடுக்க கடினமாக உள்ளது. பெரும்பாலானவர்கள் அதிகாரிகளால் தாங்கள் துன்புறுத்தப்பட்டுவதாக ரயில்வே திணைக்களத்திடம் முறைப்பாடு செய்கின்றனர். அத்தோடு, சமூக ஊடகங்களில் மோசமான கருத்துக்களைப் பதிவிடுகிறார்கள்.

ரயில்களின் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணம் செய்வது தொடர்பாக தற்போது எந்த விதிகளும் நிபந்தனைகளும் இல்லை. இருப்பினும் விபத்துக்கள் ஏற்பட்டால் நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம் என குறித்த திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது. (எ)

## கல்முனை வடக்கு விவகாரம்

# மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் ஒரு மாதம் கடந்தது!




கல்முனை, ஏப். 26

**கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மீதான நிர்வாக அடக்குமுறைகளை கண்டித்து முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்றுடன் ஒரு மாதத்தை பூர்த்தி செய்தது.**

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அந்தப் பிரதேச மக்கள் கடந்த மார்ச் 25 ஆம் திகதி தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில், போராட்டம் ஆரம்பமாகி நேற்றுடன் ஒரு மாதம் நிறைவடைந்தது. நேற்றைய தினமும் போராட்டம் தொடர்ந்திருந்தது.

இதேநேரம், கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகிறது.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ஐ)



# 24ஆவது படைப்பிரிவின் தளபதி பதவியேற்றார்!

கல்முனை, ஏப். 26

இராணுவத்தின் அம்பாறை 24ஆவது படைப் பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் அனில் பெரேரா வியாழக்கிழமை பதவியேற்றார்.

24வது படைப்பிரிவின் வந்தடைந்த புதிய பிரிவு தளபதிக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.மகா சங்கத்தின் பிரித் சத்காயனா பின்னர், தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்டார்.

அம்பாறை புத்தங்கல ராஜகிய பண்டித திகவாபி சுசீம தேரர் ஆசி வழங்கினார். இதன் பின் 24வது பிரிவு வளாகத்தில் மரம் இராணுவ தளபதியால் நடப்பட்டது.



# கல்முனை மாநகர சபையில் மகிழ்ச்சி விழா நடைபெற்றது

கல்முனை, ஏப். 26

ரமழான் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கல்முனை மாநகர சபையில் ஏற்பாடு செய்யப்பட்ட மகிழ்ச்சி விழா நேற்று முன்தினம் மாநகர ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

சர்வமத ஆராதனைகளுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம், . பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன், விருந்துபரசாரமும் நடைபெற்றது. (ஐ)

# திருமலை எம். பி. சம்பந்தனுக்கு சம்பளத்துடன் 3 மாத விடுமுறை!

கொழும்பு, ஏப். 26

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு சம்பளத்துடன் கூடிய மூன்று மாத கால விடுமுறை வழங்க பாராளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த யோசனையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்த தீர்மானத்தை ஆதரித்தார்.

91 வயதாகும் இரா. சம்பந்தன் தற்போது சுகயீனமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் கைதானவருக்கு மறியல்

அக்கரைப்பற்று, ஏப். 26

பெரியநீலாவணையில் போதைப்பொருட்களுடன் கைதான இளைஞரை மே 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்து அவர் தொடர்ச்சியாக மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீண்ட காலமாக போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளார். அத்துடன், நுகர்ந்தும் வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை கைது செய்யப்பட்டபோது, 1.9 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஹைஏஸ் வான் மோதி மாணவி படுகாயம்!

திருகோணமலை, ஏப். 26

சைக்கிளில் சென்ற மாணவியை ஹைஏஸ் வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

திருகோணமலை நகரின் இராஜவரோதயம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் 15 வயது பாடசாலை மாணவியே படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் அறிய வருவதாவது,

மாணவி சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் மாணவியை மோதியது.

படுகாயமடைந்த மாணவி திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில், ஹைஏஸ் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முந்திரி மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன

திருகோணமலை, ஏப். 26

மூதூர் அகில இலங்கை வாலிபர் முண்ணனி கிளையின் ஏற்பாட்டி சிற்றி கார்டின் திருகோணமலை மாவட்டத்தின் இணைப்பாளர் அஷ்ஷேக் சித்தீக் தலைமையில் அறபா நகரில் தேவையுடைய நபர்களுக்கு முந்திரி மரக்கன்றுகள் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

இதில் மூதூர் வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர் ஜிஹாத் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# ஓய்வூதியர் பொதுக்கூட்டம்

நிந்தவூர், ஏப். 26

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் பிரதேசக்கிளையின் 21 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கின்றது.


ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் கிளைத் தலைவர் ஏ. எல்.மஹ்றூப் தலைமையில், நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலை மர்ஹூம் அஷ்ரப் ஞாபகர்த்த மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அத்துடன், நிந்தவூர் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல். சாஜிதா பர்வீன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஏ.எம்.ஜாபிர் அம்பாறை மாவட்ட அரச சேவை ஓய்வுதியர் நம்பிக்கை நிதிய செயலாளர் ஏ.உதுமா லெவ்வை, எம்.ரி.நெளபல் அலி (அதிபர்) ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் ஒய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் பிரதேச கிளையில் நீண்டகால உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் சேவையாற்றிய நால்வர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளளர். (06)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் விசாரணை



மட்டக்களப்பு, ஏப். 26

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பணிமனையால் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் நேற்று விசாரணைகள் நடத்தப்பட்டன.

ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்ட களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி, வெல்லாவெளி பட்டிப்பளை, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் பணிமனையின் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

61 பேருக்கு விசாரணைக்கான அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# உலகை அச்சுறுத்தும் பெரும் ஆபத்து 28.2 கோடி பேர் பட்டினியால் தவிப்பு

நியூயோர்க், ஏப். 26

**உலகம் முழுவதும் பல்வேறு நகரங்களில் மக்கள் பட்டினியால் வாடி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த ஆண்டில் 28 கோடி பேர் கடுமையான பட்டினியை எதிர் கொண்டனர் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது. அத்தோடு, பட்டினியால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டுடன் தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக அதிகரித் துள்ளது என்றும் ஐ. நா. அதிர்ச்சித் தகவலை வெளியிட் டுள்ளது.**

இதுதொடர்பில் ஐ. நா. உணவு பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

2023 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் உணவு பாதுகாப் பின்மை மோசமடைந்தது. சுமார் 28. 20 கோடி மக்கள் கடுமையான பட்டினியால் பாதிக்கப்பட்டனர்.

குறிப்பாக போர்ச் சூழல் உள்ள காஸா மற்றும் சூடானில் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

தீவிர வானிலை நிகழ்வுகள், பொருளாதாரப் பாதிப்புக்கள் உள்ளிட்டவைகளால் கடுமை யான உணவுப் பாதுகாப்பின் மையை எதிர்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

பட்டினியால் பாதிக்கப்படு பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக அதிகரித்துள்ளது. போர், சீரற்ற காலநிலை மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடி போன்றன வற்றால் 2023 ஆம் ஆண்டில் சுமார் 30 கோடி மக்கள் கடுமை யான உணவு நெருக்கடியை எதிர்கொண்டனர்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப் பிடும்போது 2023 ஆம் ஆண் டில் 2. 40 கோடி மக்கள் அதிக ரித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான், கொங்கோ, எதியோப்பியா, நைஜீரியா, சிரியா மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் நீடித்த பெரும் உணவு நெருக்கடிகள் தொடர்கின்றன.

ஹைட்டி நாட்டில் மோசமான அரசியல் ஸ்திரமின்மை மற்றும் விவசாய உற்பத்தி குறைந்ததால் பட்டினி ஏற்பட் டுள்ளது. எல் நினோ வானிலை நிகழ்வு மேற்கு மற்றும் தென் னாபிரிக்காவில் கடுமையான வறட்சிக்கு வழிவகுக்கும்.

13. 50 கோடி மக்கள் பாதிக் கப்பட்டுள்ள 20 நாடுகள் அல் லது பிரதேசங்களில் கடுமை யான பட்டினிக்கு மோதல் அல்லது பாதுகாப்பின்மை சூழ் நிலைகள் முக்கிய காரணமாக உள்ளன.

வெள்ளம் அல்லது வறட்சி போன்ற தீவிர காலநிலை நிகழ் வுகள் 18 நாடுகளில் 7. 20 கோடி மக்களின் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மைக்கு முக்கிய காரணமாகும்.

பொருளாதாரப் பாதிப்புக் களால் 21 நாடுகளில் 7. 50 கோடி மக்கள் பட்டினியால் பாதிப்பை சந்தித்தனர் என்று அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

# இந்திய - சீன எல்லையில் கனமழையால் நிலச்சரிவு



டில்லி, ஏப். 26

இந்தியாவின் அருணாச்சல பிரதேசம் - சீன எல்லையை ஒட்டிய நெடுஞ்சாலையில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள் ளது. திபெங் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் நெடுஞ் சாலை கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

அருணாச்சல பிரதேசத்தி லுள்ள திபாங் பள்ளத்தாக்கில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை - 33 இல் ஹூன்லி மற்றும் அனினி நகரங்களுக்கு இடையேயான பகுதி கடுமையாகச் சேதமடைந் துள்ளது.

வீதியைச் சீரமைக்க மூன்று நாட்களாகும் என அருணாச்சல பிரதேச மாநில அரசு தெரிவித் துள்ளது. நிலச்சரிவு காரணமாக சீன எல்லை ஒட்டிய இராணுவ முகாம்களுக்கு செல்லும் சாலை யில் போக்குவரத்து பாதிக்கப் பட்டிருக்கிறது. அதோடு, மாநி லத்தின் பல மாவட்டங்களுக்கி டையேயான தகவல் தொடர் பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

*ரஷ்ய படைகளுக்கு எதிராக*

# அமெரிக்கா வழங்கிய ஏவுகணையை பயன்படுத்த ஆரம்பித்தது உக்ரைன்

கீவ், ஏப். 26

அமெரிக்கா இரகசியமாக வழங்கிய நீண்டதூர ஏவுகணை களை ரஷ்ய படையினருக்கு எதிராக உக்ரைன் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி அனு மதி வழங்கிய உக்ரைனுக்கான பாதுகாப்பு உதவியின் ஒரு பகு தியான இந்த ஏவுகணைகள் இந்த மாதம் உக்ரைனை சென்ற டைந்தன.

இந்த ஏவுகணைகளை கிரிமி யாவில் நிலை கொண்டுள்ள ரஷ்ய படையினருக்கு எதிராக உக்ரைன் பயன்படுத்தியுள்ளது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா முன்னர் ஏ. டி. சி. எம். எஸ். ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கியிருந்தது. எனினும் அந்த ஏவுகணைகளை விட வலுவான ஏவுகணைகளை வழங்க தயக்கம் கொண்டிருந் தது.

எனினும் உக்ரைனுக்கு நீண் டதூர ஏவுகணைகளை வழங்கு வதற்கு அமெரிக்க ஜனாதிபதி இரகசியமாக அனுமதி வழங் கியுள்ளார்.

இந்த ஏவுகணைகள் 300 கிலோ மீற்றர் செல்லக்கூடியவை.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த ஏவுகணைகள் வழங்கப்பட்டுள்ளதை உறுதி



செய்ய முடியும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் தனது போர் நடவ டிக்கை மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த விட யத்தை பகிரங்கப்படுத்த வேண் டாம் எனக் கேட்டுக்கொண்ட தால் அமெரிக்கா இதுவரை பகிரங்கப்படுத்தவில்லை.

இந்த ஏவுகணைகள் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என அமெரிக்கா வின் பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் தெரிவித்தார்.

இதேவேளை, கிரிமியாவி லுள்ள விமானத் தளத்தை தாக் குவதற்கு புதிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தியுள்ளது என சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் செய்தி வெளியிட் டுள்ளது. (எ)

# போராட்டங்கள் தீவிரமடைவதால் அமெரிக்காவில் பெரும் பதற்றம்!

நியூயோர்க், ஏப். 26

அமெரிக்கப் பல்கலைக்கழ கங்களில் இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ள பொலிஸார் 100 இற்கும் மேற் பட்ட மாணவர்களைக் கைது செய்தனர்.

அவுஸ்டினின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட 34 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

தென்கலிபோர்னியா பல்க லைக்கழகத்தில் 50 இற்கும் அதிக மானவர்கள் கைது செய்யப்பட் டனர்.

இஸ்ரேலுடன் தொடர்புக ளைக் கொண்டுள்ள ஆயுத விநி யோகஸ்தர்களுடனான தொடர்பைத் துண்டிக்கவேண்டும் எனக் கோரி நியூயோர்க்கின் கொலம் பியா பல்கலைக்கழக மாணவர் கள் பல்கலைக்கழகத்தை சூழ கூடாரங்களை அமைத்து போராட்டங்களை ஆரம்பித்த தைத் தொடர்ந்து அமெரிக்கா வின் பல பல்கலைக்கழங்களில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட



பல மாணவர்கள் பல்கலைக்கழ கங்களிலிருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளனர். பலர் கைது செய் யப்பட்டனர்.

கலிபோர்னியாவில் யுசி பேர்க்லே மற்றும் யு. எஸ். சி. பல்கலைக்கழங்களில் ஆர்ப் பாட்டங்கள் தீவிரமடைந்துள் ளன.

கலிபோர்னியா அரச பொலி டெக்னிக் பல்கலைக்கழகத்தில் தளபாடங்கள், கூடாரங்கள் போன்றவற்றை பயன்படுத்தி மாணவர்கள் பல்கலைக்கழகத் துக்குள் முற்றுகைப் போராட் டத்தை மேற்கொண்டதால் பல்கலைக்கழகம் மூடப்பட் டது.

பலஸ்தீன ஆதரவுக் குழு வைச் சேர்ந்த மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கும் காஸா யுத்தத்துக்காக பல்கலைக் கழகம் இஸ்ரேலுடனான உறவு களைத் துண்டிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தும் ஹவார்ட் பல்கலைக்கழக மாண வர்கள் பல்கலைக்கழக வளாகத் துக்குள் கூடாரங்களை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர்.

மாசசூட்ஸ் முதல் கலிபோர் னியா வரை பல பல்கலைக்கழங் களில் ஆயிரக்கணக்கான மாண வர்கள் பேரணிகள் மற்றும் பல் கலைக்கழகங்களைச் சுற்றி முற் றுகையிடும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.பல்கலைக்க ழக மாணவர்களின் தொடர் போராட்டங்களால் அமெரிக் காவில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. (எ)

# மோடி, ராகுல் விளக்கமளிக்க தேர்தல் ஆணைக்குழு உத்தரவு

டில்லி, ஏப். 26

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, காங் கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம். பி. ஆகியோர் விளக் கமளிக்க வேண்டுமென தேர் தல் ஆணைக்குழு உத்தரவிட் டுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி காலை 11 மணிக்குள் விளக்கம ளித்திருக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் மோடி இராஜஸ்தா னில் நடந்த தேர்தல் பிரசாரத் தில் வெளியிட்ட கருத்து தொடர் பாக காங்கிரஸ் செய்த முறைப் பாடு குறித்து தேர்தல் ஆணைக் குழு ஆய்வு செய்து வருவதாக



தகவல்கள் வெளியான நிலை யில் விளக்கம் கேட்டு தற்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் உரை பிரிவினையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது என்று காங்கி ரஸ் குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை, நாட்டில் வறுமை அதிகரிப்பு குறித்து ராகுல் காந்தி தவறான கூற்றை கூறி வருகிறார். மேலும், தேர் தல் சூழலை சீர்குலைப்பதற்காக மொழி மற்றும் பிராந்தியத்தின் அடிப்படையில் நாட்டில் வடக்கு - தெற்கு பிரிவினையை ராகுல் காந்தி உருவாக்கி வருகி றார் என்று பா. ஜ. க. தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தது. இந்தப் முறைப்பாட் டின் அடிப்படையில் ராகுல் காந்தியும் விளக்கமளிக்க வேண் டும் என்று தேர்தல் ஆணைக் குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# “ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை இந்த அரசிடம் இனி கோர மாட்டோம்”

## விசேட நீதிமன்றத்தை அமைத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை




**கொழும்பு, ஏப். 26**

**உயிர்த்த ஞாயிறுதின தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துமாறு இனியும் இந்த அரசாங்கத்திடம் கோரிக்கை விட மாட்டோம். எமது அரசாங்கத்தில் விசேட விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்போம்.- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.**

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன்கொண்டு வருவதுடன், அவர்களுக்கு வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச தண்டனையை வழங்கவும் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி தமது ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் ஏற்கனவே அறிவித்துள்ளோம். அதாவது விசேட விசாரணை ஆணைக்குழுவொன்றை நாங்கள் அமைப்போம். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளையும் விசேட விசாரணையாளர்களையும் கொண்டதாக விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படும்.

விசாரணைகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்து, ஆணைக்குழுவால் வழங்கப்படும் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, சட்டமா அதிபர் ஊடாக குற்றவியல் வழக்குகளைத் தொடர்ந்தும், இதற்காக விசேட நீதிமன்றத்தை அமைத்தும், சுயாதீன அரசாங்கத்தின் குற்றப்பத்திரிகை அலுவலகம் ஒன்றையும் அமைப்போம். - என்றார் சஜித். (எ)

# பாதாள குழுக்களை ஒழிப்பது பாவமல்ல

## பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்

கொழும்பு, ஏப். 26

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை நாட்டிலிருந்து ஒழிப்பது பாவமான செயல் அல்ல என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காகக் கடந்த இரண்டு வாரங்களாகப் பயிற்றுவிக்கப்பட்டு வந்த 100 பேர் கொண்ட பொலிஸ் விசேட அதிரடிப் படை குழுவின் செயல்பாடுகளை ஆரம்பிப்பதனை முன்னிட்டு நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதாள உலகக் குழுச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த பொலிஸ் விசேட அதிரடிப் படை குழுவுக்காகத் துப்பாக்கிகளுடனான 50 பொலிஸ் விசேட மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் பாதாள உலகக் குழுவினரும் அதிகரித்தமையே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முக்கிய காரணம்.

எனவே அனைவரும் அச்சமின்றி இலங்கை நோக்கிச் செல்லுங்கள். இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது துப்பாக்கிகளைப் பயன்படுத்த நேர்ந்தால் சரியான சந்தர்ப்பத்தில் அதனைப் பயன்படுத்துங்கள்.

உங்களுக்குத் துணையாக நாங்கள் எப்போதும் இருப்போம். தவறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# ஜனாதிபதித் தேர்தலே நடக்கும் இவ்வருடம் அரசாங்கம் மாறாது

## என்கிறார் அமைச்சர் பிரசன்ன

கம்பஹா, ஏப். 26

அதிகாரிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அரசாங்கம் மாறப்போகின்றது என்று. இல்லை அரசாங்கம் அப்படியே இருக்கும். இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே நடக்கும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சில அரச அதிகாரிகளின் தவறான முடிவுகளால் அரசாங்கமும் மக்களும் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்வதாகவும் அவர் கூறினார்.

அதிகாரிகளின் இவ்வாறான தவறுகளால் இறுதியில் மக்களால் குற்றஞ்சுமத்தப்படுவது அரசியல்வாதிகள்மீது தான் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில அரச நிறுவனங்களில் அதிகாரிகளின் அதிகாரத்துவம் காரணமாக அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கம்பஹா மாநகர சபையில் எழுந்துள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கம்பஹா மாநகர சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிகாரிகளின் தாமதத்தால் அரசுக்கு எவ்வளவு இழப்பு? ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவுகளுக்கு அதிகாரிகள் செவி சாய்ப்பதில்லை. எடுக்கும் முடிவுகள் வெறும் பேச்சில் எடுக்கப்பட்ட முடிவல்ல. முடிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதல் அளித்தவுடன், செயல்படுத்த வேண்டிய திட்டங்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்புகிறோம். மதிப்பீடு செய்து தயார் நிலையில் வைக்க வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு தான். அனுமதி கிடைத்தவுடன் வேலைகளை ஆரம்பிக்க முடியும். இங்குள்ள மிகப்பெரிய தவறு வேலை செய்யும் போது ஒருங்கிணைப்பில் உள்ள சிக்கல். அவை சரி செய்யப்பட வேண்டும்.- என்றார். (எ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சி உயர்மட்ட பிரதிநிதிகள் ஐ. ம. ச. கூட்டணியின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



கொழும்பு, ஏப். 26

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த விசேட சந்திப்பு ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இச்சந்திப்பைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் சன் ஹையன் இடையில் பிரத்தியேகச் சந்திப்பும் இடம்பெற்றது.

பொருளாதாரம், வர்த்தகம், அரசியல் உறவுகள் என பல துறைகள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை ஏற்படுத்துவது தொடர்பில் இரு தரப்புக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இங்கு, சீனாவின் பொருளாதார அபிவிருத்தி மாதிரியைக் கருத்திற் கொண்டு, இலங்கை தற்போதைய சூழ்நிலையிலிருந்து மீண்டு வரக்கூடிய முறை குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத் தலைவர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

மேலும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சீனப் பிரதிநிதிகள் குழுவிடம் தெரிவித்தார்.

அத்துடன், இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதால், அதன் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் குழுவினரிடம் தெரிவித்ததுடன், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியைக் கட்டியெழுப்ப தானும், ஐக்கிய மக்கள் சக்தியும் தயாராக உள்ளதாகவும் சஜித் சுட்டிக்காட்டினார். (எ)

# வெளிநாட்டு வேலை தொடர்பில் இவ்வருடம் 1371 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 26

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் வெளிநாட்டு வேலை தொடர்பில் 1,371 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்த்தல், வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடிகள் செய்தல், சுற்றுலா வீசா மூலம் வெளிநாட்டு வேலைகளுக்கு மக்களை வழிநடத்துதல் போன்ற குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில் 495 முறைப்பாடுகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ள நிலையில் முறைப்பாட்டாளர்களுக்கு சொந்தமான சுமார் 53,509,520 ரூபாய் பணத்தை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 680 முறைப்பாடுகள் தொடர்பில் சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடி தொடர்பில் 28 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டுள்ளனர்.

மேலும், அனுமதியின்றி சட்டவிரோதமாக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் 8 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு...

குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இப்போது விவாதிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்தப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாக 9 நாட்கள் விவாதம் நடந்தது. இருப்பினும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் சனல் - 4 ஆவணப்படம் வெளியாகியுள்ளது. பிள்ளையான் புத்தகம் வெளியிட்டுள்ளார். பிரதான சூத்திரதாரியை நாங்கள் அறிவோம் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.

குண்டுத் தாக்குதலின் பின்னணியில் அரசியல் இல்லை என்று குறிப்பிட முடியாது. குண்டுத்தாக்குதலை தோளில் சுமந்து சென்றவர்களை முறையாக விசாரணை செய்தால் உண்மையைக் கண்டு பிடிக்கலாம். மக்களாணை இல்லாத இந்த அரசாங்கம் ஒருபோதும் உண்மையைப் பகிரங்கப்படுத்தாது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ராஜபக்ஷக்களின் அரசியல் செயல்பாடுகள் முஸ்லிம் அடிப்படை வாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம், சிங்கள இனத்துக்கு அச்சுறுத்தல் என்பதை மையப்படுத்தியிருந்தது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இதன் உச்சக் கட்டம்.

குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரே 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெறுபேறு எழுதப்பட்டது. குண்டுத் தாக்குதலுக்கு அப்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ஐ-எ)

## ரணிலின்...

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவர் பத வியை பொறுப்பேற்பது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட் டது. இது விடயத்தில், தமது கட்சி ஏற்கனவே நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டது என்றும் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தியிருந்தார். (ஐ)

## 450கோடி...

நிலையத்தை சீனா தனது முழுமையான கட்டுப்பாட்டுடன் நிறுவவே முயன்று வருகிறது என்று சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸ் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட சினோபெக் நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த நிலையில், எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமைக்கவும் சீனா ஆர்வம் காட்டியது.

இதற்கான ஆய்வை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நிறைவுறுத்த அந்த நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. இந்த நடவடிக்கை, சினோபெக்கின் வெளிநாட்டு மூலோபாயத்தில் பெரும் மாற்றமாக உள்ளது. என்றாலும், இது இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதற்கான எதிர்வினையாக கருதப்படுகிறது.

இத்திட்டத்துக்காக 4.5 பில்லியன் டொலர் முதலீட்டை சீனா மேற்கொள்ளும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நடந்தால் அது வெளிநாடொன்றால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய முதலீடாக அமையும் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குற்றச்சாட்டுக்கள்...

ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களை தண்டிக்க நேரிடும் என்பதால் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவில்லை என்று கூறியிருந்தார். அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் பங்கு உள்ளதாகவும் சாடியிருந்தார்.

இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கர்தினாலின் குற்றச்சாட்டுகளை மறுத்து தன்னிலை அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முக்கியம் அம்சங்கள் வருமாறு,

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்ட மறுநாள் நான் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை தொடர்புகொண்டேன் என்று கர்தினால் தெரிவித்துள்ளார். ஆனால், அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நான் கர்தினாலை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவே இல்லை.

முஸ்லிம் சமூகத்தினர் எனக்கு வாக்களிக்கவில்லை - என்னை ஆதரிக்கவில்லை என்பது நன்கு தெரிந்ததே. எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தடை செய்யப்பட வேண்டிய அமைப்பில் நான் ஏன் ஆதரவாளர்களை வைத்திருக்க வேண்டும்?

2021 பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டது. நான் அதனை ஆராய்ந்த பின்னர் சட்டமா அதிபரிடம் பாரப்படுத்தினேன். 2021 பெப்ரவரி 23ஆம் திகதி அது சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. மார்ச் முதலாம் திகதி அதன் பிரதிகள் கர்தினால் மற்றும் கத்தோலிக்க ஆயர்களுக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்ததும் ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நான் ஆறு பேர் கொண்ட அமைச்சரவை உபகுழுவை நியமித்தேன்.

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின் கீழ் சி. ஐ. டியின் அப்போதைய இயக்குநர் 2019 நவம்பரில் பொலிஸ் ஆணைக்குழுவால்பதவி மாற்றம் செய்யப்பட்டார். இந்த பொலிஸ் ஆணைக் குழு 19ஆவது திருத்தத்தின் கீழ் முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. மேலும், உயர்நீதிமன்ற வழக்கு தொடர்பில் நீதிபதிகள் மீது செல்வாக்கு செலுத்துவது தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நடந்த தொலைபேசி உரையாடல்கள் கசிந்ததாலேயே சி. ஐ. டி. அதிகாரி இடைநிறுத்தப்பட்டார்.

இதற்கு சில மாதங்களின் பின்னர், முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிரான குற்றவியல் சம்பவம் தொடர்பில் பொய்யான ஆதாரங்களை உருவாக்கியமைக்காக அந்த சி. ஐ. டி. அதிகாரி மறியலில் வைக்கப்பட்டார். எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை சீர்குலைப்பதற்காக இந்த அதிகாரியை நானே பதவி நீக்கம்செய்தேன் என்பதை மறுக்கிறேன்.

சட்ட அமுலாக்கல் தரப்பினர் மேலும் எச்சரிக்கையுடன் இருந்திருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னரே சஹ்ரான் குழுவினரை கைது செய்திருக்கலாம் என்று ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலை தடுக்க தவறியது சி. ஐ. டி. பணிப்பாளரின் தவறே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்தவில்லை என கர்தினால் குற்றம்சாட்டியுள்ளார். எனினும், குற்றவாளிகளை அரசியல்வாதிகளால் நீதியின் முன் நிறுத்தமுடியாது. பொலிஸாராலேயே அதனை செய்ய முடியும். சட்டமா அதிபர் திணைக்களமும் நீதி கட்டமைப்பும் இணைந்து இதனை முன்னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இஸ்லாமிய பயங்கரவாதிகளே நடத்தினர். புலனாய்வு விசாரணைகளில் மிக முக்கிய அமைப்பான சி. ஐ. டி. இந்தத் தாக்குதலுக்கு பல மாதங்கள் முன்னராகவே தாக்குதலை நடத்திய அமைப்பு மற்றும் நபர்கள் குறித்து விசாரணை நடத்தியது. ஆனால், அவர்கள் தாக்குதலை நடத்த முன்னர் அவர்களை கண்டு பிடிக்க தவறிவிட்டது - என்று உள்ளன. (ஐ)

## சஜித்தை...

குழுக்களைக் கொண்டு சஜித்தை படுகொலை செய்ய தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டிருந்தது - என்று குருநாகலில் அவரின் கட்சி பணிமனையில் நடந்த நிகழ்வு ஒன்றில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எனினும், இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியோ எதுவித பிரதிபலிப்பையும் காட்டவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## 1,500...

1,512 குடும்பங்களைச் சேர்ந்த 4,567 பேர் இருக்கின்றனர். இவர்களில் 10 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும் 1,502 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. இவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டியவர்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 5,555...

பிரதேச செயலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையின் பின்னரே காணாமல் போனோர் பணிமனையின் உறுப்பினர் ரூபராஜா மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.

மேலும், இதுவரையில் எமது காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு 21 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் முப்படையினர், பொலிஸார், இரட்டைப்பதிவுகள் நீக்கப்பட்ட நிலையில் 14 ஆயிரத்து 988 விண்ணப்பங்கள் விசாரணைக்காக ஏற்கப்பட்டுள்ளன.

இவற்றில் 5 ஆயிரத்து 555 விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் 4 ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் இடைக்கால நிவாரண கொடுப்பனவுக்காக இழப்பீட்டு பணிமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2 ஆயிரம் சிபாரிசு கடிதங்கள் இறப்பு சான்றிதழ் வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன - என்றும் அவர் கூறினார். (ஐ)

## கடவுளின்...

- இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தண்டனைக்குத் தயாராக வேண்டும். குண்டுத் தாக்குதலை நடத்த புலனாய்வுப் பிரிவினரே இடமளித்தனர். உண்மை நிச்சயம் வெளிவரும்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நியாயத்தை பெற்றுக்கொள்ள சர்வதேசத்தை நாடுவதாக பேராயர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதால் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும். யுத்த விவகாரம் ஜெனிவாவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது முடிவடைந்து விட்டது என்று எண்ண வேண்டாம். நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

பொருளாதார குற்றவாளிகள், பொருளாதாரக் குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வருடாந்த கூட்டத் தொடரில் குறிப்பிட்டது. இதனைத் தொடர்ந்து பொருளாதாரக் குற்றவாளிகளின் பெயரை எமது உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியது. ஆகவே, சர்வதேச விசாரணைகளை அலட்சியப்படுத்த முடியாது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை முழுமையாக சர்வதேசத்துக்குப் பொறுப்பாக்க விரும்பவில்லை. உள்ளக மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு நியாயத்தை நிலைநாட்டுங்கள் என்றே சர்வதேசம் குறிப்பிடுகிறது. - என்றார். (எ)

## சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொது செயலராக துமிந்த

கொழும்பு, ஏப். 26

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக துமிந்த திஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் கூடியது. இதன்போதே சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக துமிந்த திஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.(எ)

## கொக்குவில்...

இதையடுத்து, கொக்குவில் ரயில் நிலையத்தின் பொறுப்பதிகாரி இடைநிறுத்தம் செய்யப்பட்டார். அத்துடன், ரயில் நிலையத்துக்கும் தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டமையால் பயணிகள் பயண சீட்டுகளை பெற யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு செல்லுமாறும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாணவர்களுக்கு...

பொதிகள் உலக உணவுத் திட்டத்தால் மேலதிகமாக வழங்கப்பட் டது. அரச நிதியில் விநியோகிக்கப்படும் உணவு சிறுவர் கள் உண்பதற்கு ஏற்றது என்பதை அரசு உறுதி செய்கி றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஊடாக பாடசாலைகளுக்கு அரிசி கையிருப்புக் காக வழங்கப்பட்ட பின்னரும் மாகாண பொது சுகாதார பரிசோதகர்களால் வழக்கமான தர பரிசோதனைகளை செய்யும்படி ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது.

அரசாங்கம் ஒவ்வொரு பிள்ளைக்கும் ரூபாய் 110 வீதம் ஒதுக்குகிறது. அதுமட்டுமில்லாமல் வேறு ஆதாரங்களிலுமிருந்தும் நிதி கிடைக்கப் பெறுகிறது.

எனவே, உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அரிசியுடன் அரசாங்கத்தின் நிதியுதவியில் கிடைக்கும் அரிசியை கலக்க வேண்டாம் - என்றார். (ஐ)

## அரசின்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்கை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆண்டு பணப்புழக்கத்தை முகாமைத்துவம் செய்வதில் திறைசேரி கடும் சவாலை எதிர்கொள்கிறது. தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும் பணத்தை அச்சிடவும் முடியாமல் இருப்பதே அதற்கு காரணமாகும். நலன்புரி மற்றும் மீள்கட்டமைப்புச் செயல்பாடுகள் அதிகமாக காணப்பட்டாலும் நாட்டில் சரியான முறையில் நிதி நிர்வாகம் செய்யப்படுகிறது.

மீள்கட்டமைப்புச் செலவுகள் குறித்து கவனம் செலுத்தி 2024 முதல் காலாண்டை 2020 முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், மீள் கட்டமைப்புச் செலவுகள் 35 வீதம் அதிகரித்துள்ளன. கடன் வட்டியை திருப்பிச் செலுத்துவதிலும் 114 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மூலதன செலவும் 60 வீதமாக உயர்ந்துள்ளது. பொதுக் கடனின் மூலதனத்தை திருப்பிச் செலுத்துவதிலும் 177 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், அரச வருமானம் 6 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது. அரச வருமானமாக 787 பில்லியன் ரூபாய் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 834 பில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இல்மனைட் அகழ்வுக்கு எதிராக மட்டக்களப்பில் போராட்டம்!

வாகரை, ஏப். 26

**மட்டக்களப்பு - வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணைகளுக்கு எதிராக மட்டக்களப்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தில் இரு அணிகளுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் பதற்ற நிலையும் உருவானது.**

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெருகல் முதல் காயன்குடா வரையில் முன்னெடுக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்வு மற்றும் வாகரை பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள இறால் பண்ணை அமைக்கும் திட்டத்துக்கு எதிராக வாகரை பிரதேச பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணைக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள்,



சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, இல்மனைட் அகழ்வுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் அதற்கு எதிரான பதாதைகளையும் தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் நிறைவடைந்ததும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் தமது கோரிக்கையை முன்வைப்பதற்காகச் சென்றனர்.

இதன்போது மாவட்ட செயலகத்தில் இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணைகளுக்கு ஆதரவானவர்கள் நின்றிருந்தபோது இரண்டு பிரிவினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் அங்கு பதற்ற நிலை உருவானது. (எ)

## ஸ்ட்ரோபரி பழ சாகுபடிக்காக நுவரெலியாவில் மாதிரி கிராமம்!

கொழும்பு, ஏப். 26

இலங்கையின் முதலாவது ஸ்ட்ரோபரி சாகுபடி மாதிரி கிராமத்தை நுவரெலியாவில் நிறுவுவதற்கு விவசாய அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட, புதிய பயிர்களை நோக்கி விவசாயிகளை வழிநடத்துவதே இதன் நோக்கமாகும்.

இதன் முதல் கட்டமாக நுவரெலியாவில் 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு, ஸ்ட்ரோபரிச் செடிகள், புதிய தொழில்நுட்பம் மற்றும் நீர் விநியோகம் ஆகியவை வழங்கப்படவுள்ளதாக விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு ஒரு விவசாயிக்கு தலா 13 இலட்சம் ரூபாய் செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்படுவதோடு, மீதமுள்ள 6 இலட்சத்தை அந்தந்த விவசாயிகள் முதலீடு செய்ய வேண்டும் என குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# காலாவதியான பொருட்கள் விற்ற கடை உரிமையாளருக்கு அபராதம்

சங்கானை, ஏப். 26

யாழ்ப்பாணம் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது காலாவதியான உணவுப் பொருட்கள், பழுதடைந்த உணவுப் பொருட்கள், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வியாபார விற்பனை நிலையம் சிக்கிக் கொண்டது.

இந்த கடை உரிமையாளருக்கு எதிராக சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகரால் நேற்றையதினம் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், பலசரக்கு கடை உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. அத்துடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டன. (எ)

## மே தின பரிசாக சம்பள உயர்வு

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 26

தோட்டத் தொழிலாளர்களுக்கு மே தினப் பரிசாக சம்பள உயர்வை வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. மே தினம் தொழிலாளர் தினமாகும். அன்றைய தினம் மே தினப் பரிசாக சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (எ)

# மீள போராட்டம் வெடிக்காத வகையில் ஸ்திரமான பொருளாதார கட்டமைப்பு

### இலங்கையில் உருவாக்கப்படுமென ரணில் உறுதி

கொழும்பு, ஏப்.26

நாட்டில் மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்காத வகையில் பொருளாதாரத்தை கட்டமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சரிவடைந்த பொருளாதாரத்தை இரண்டு வருடங்களில் மீட்க முடிந்தது. சரிவடையாத வகையில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பு ஐ. ரி. சி. ரத்னதீப அதிசொகுசு ஹோட்டல் கட்டடத்தை நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்த பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

தற்போதும் கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்கமுடியும்.

சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார்.

அவ்வாறானதொரு மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாதவாறான பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும். அதற்கு தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்தத் திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும்.- என்றார். (எ)

## ஜப்பானிய உணவகத்தை திறந்து வைத்தார் ரணில்



கொழும்பு, ஏப். 26

கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நிறுவப்பட்ட நிஹொன்பஷி ஜப்பானிய உணவகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார்.

1995 ஆம் ஆண்டு காலி முகத்திடல் டெரஸில் நிறுவப்பட்ட முதலாவது நிஹொன்பஷி ஜப்பானிய உணவகம், பிரபல சமையல் கலைஞரான தர்ஷன முனிதாஸவால் நாட்டுக்கு அளிக்கப்பட்ட முன்னணி உணவகமாகும். கடந்த 29 ஆண்டுகளாக இந்த உணவகம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான ஜப்பானிய உணவை ருசிக்கும் வாய்ப்பை வழங்கியது.

தற்போது இந்த உணவகம் காலிமுகத் திடல் நகர வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. உணவகத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்த ஜனாதிபதி, மேற்பார்வை மேற்கொண்டதுடன், அங்கிருந்த பொதுமக்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

# “தமிழரின் பூர்வீக நிலங்களை அபகரித்து முல்லைத்தீவில் சிங்கள குடியேற்றங்கள்”

புதுக்குடியிருப்பு, ஏப். 26

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர் என வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை ஆட்சியாளர்கள் அபகரித்துக் கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் கூடுதலான நிலப்பரப்பை ஒவ்வொரு திணைக்களங்களின் ஊடாகவும் அபகரித்து அவற்றை சிங்கள மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் நிலையே காணப்படுகின்றது.

அபகரிக்கப்பட்ட காணிகளில் சில இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் அதாவது வெலிஓயா என்று சொல்லக்கூடிய 28 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிங்களவர்களைக் குடியேற்றி தனி ஒரு சிங்கள பிரதேச செயலகப் பிரிவாக உருவாக்கி இன்று எங்களுக்கு சவால் விடும் அளவுக்கு மக்கள் தொகையை மேலும் வளர்த்தெடுக்கும் விதமாக அவர்களுடைய செயல்பாடுகள் காணப்படுகின்றன- என்றார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# குஜராத்தை வீழ்த்தி டில்லி த்ரில் வெற்றி



டில்லி, ஏப். 26

இறுதிப் பந்துவரை பரபரப்பாக நடந்த போட்டியில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தி த்ரில் வெற்றி பெற்றது டில்லி அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 40 ஆவது லீக் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

டில்லியிலுள்ள அருண் ஜெய்ட்லி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடந்தது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது. இதன்படி டில்லி அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 224 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தலைவர் ரிஷப் பண்ட் 43 பந்துகளில் 88 ஓட்டங்கள் குவித்தார். அக்சர் படேல் 66 ஓட்டங்கள் எடுத்தார். குஜராத் அணியின் பந்து வீச்சாளர் சந்தீப் வாரியர் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

225 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் அணி விரட்டியது. அந்த அணியின் தலைவர் /ப்மன் கில் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த சாய் சுதர்ஷனுடன் இணைந்து 82 ஓட்டங்கள் சிறந்த இணைப்பாட்டம் அமைத்தார் சாஹா. 25 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் சாஹா. அஸ்மதுல்லா ஓமர்சாய் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார்.

39 பந்துகளில் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சாய் சுதர்ஷன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷாருக்கான் மற்றும் தெவாட்டியா ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதேவேளை, அதிரடியாக விளையாடி 23 பந்துகளில் 55 ஓட்டங்கள் சேர்த்த டேவிட் மில்லர் 18 ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். சாய் கிஷோர் 2 சிக்ஸர்கள் விளாசி 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

குஜராத் அணியின் வெற்றிக்கு இறுதி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ரஷித் கான் எதிர்கொண்ட அந்த ஓவரை முகேஷ் குமார் வீசினார். முதல் இரண்டு பந்துகளில் பௌண்ட்ரி அடித்து அசத்தினார் ரஷித் கான். மூன்றாவது மற்றும் நான்காவது பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை.

ஐந்தாவது பந்தில் சிக்ஸர் விளாசினார். கடைசி பந்தில் குஜராத் அணியின் ஓட்டம் எடுக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 220 ஓட்டங்கள் எடுத்திருந்தது குஜராத் அணி. இதன் மூலம் 4 ஓட்டங்களில் வெற்றி பெற்றது டில்லி அணி.

இந்தப் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 19 ஆவது ஓவரில் டில்லி அணியின் ஸ்டப்ஸ், எல்லைக் கோடு பகுதியில் அபாரமாகச் செயல்பட்டு ஒரு சிக்ஸரை தடுத்தார். வெறும் ஒரு ஓட்டம் மட்டுமே அந்த பந்தில் குஜராத் அணி எடுத்தது. ஸ்டப்ஸ் தடுத்த அந்த 5 ஓட்டங்கள் குஜராத் அணியின் வெற்றியைப் பறித்தது என்றும் அதைச் சொல்லலாம். டில்லி அணி வீரர்கள் களத்தடுப்புப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டனர்.

ஆட்டநாயகன் விருதை டில்லி அணித் தலைவர் ரிஷப் பண்ட் வென்றார். இந்தப் போட்டிக்குப் பிறகு புள்ளிகள் பட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ், டில்லி மற்றும் குஜராத் அணிகள் தலா 4 வெற்றிகளுடன் முறையே 5, 6, 7 ஆகிய இடங்களில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




## சென்னையின் தோல்விக்கு பனிப்பொழிவும் காரணம்

சென்னை, ஏப். 26

அதிகளவிலான பனிப்பொழிவு இருந்ததால் அது எங்கள் சுழற் பந்து வீச்சாளர்களை ஆட்டத்திலிருந்து வெளியே எடுத்து விட்டது. இல்லையெனில் நாங்கள் ஆட்டத்தை இன் னும் சிறப்பாக கட்டுப்படுத்தி ஆழமாக எடுத்துச் சென்றிருக்கலாம். ஆனால் இவை விளையாட்டின் பகுதிகள், அதை கட்டுப்படுத்த முடியாது.- இவ்வாறு சென்னை அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் தெரிவித்தார்.

லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியினர் ஆட்டத்தின் பிற்பகுதியில் சிறப்பாக விளையாடினர். 13 முதல் 14 ஆவது ஓவர் வரை ஆட்டத்தை எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். ஆனால் மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் அற்புதமாக விளையாடினார்.

உண்மையைச் சொல்வதானால், நாங்கள் கொடுத்த இலக்கு போதாது என்று நினைத்தேன். ஏனெனில் எங்கள் பயிற்சி அமர்வுகளின் போது இதே அளவிலான பனிபபொழிவு இருந்தது. லக்னோ அணி துடுப்பெடுத்தாடிய விதம் பாராட்டுக்குரியது. - என்றார் ருதுராஜ்.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் நடப்பு சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

211 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய லக்னோ அணி 19. 3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 63 பந்துகளில் 124 ஓட்டங்கள் விளாசி லக்னோ அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார்.

லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் சி. எஸ். கே. அணி தோல்வியடைய பனிப்பொழிவும் ஒரு காரணியாக அமைந்தது.

சி. எஸ். கே. அணிக்கு இது 4 ஆவது தோல்வியாக அமைந்தது. 8 போட்டிகளில் விளையாடியுள்ள அந்த அணி 4 வெற்றி, 4 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்று பட்டியலில் 5 ஆவது இடத்தில் உள்ளது. அதேவேளையில் 5 ஆவது வெற்றியைப் பதிவு செய்த லக்னோ அணி 10 புள்ளிகளுடன் பட்டியலில் 4 ஆவது இடத்துக்கு முன்னேறியது. (எ)

## சம்பியன்ஷிப் பட்டத்தை தாண்டி அதிகதூரம் பயணிக்க வேண்டும்

### இந்திய கிராண்ட் மாஸ்டர் குகேஷ்

டில்லி, ஏப். 26



எனது செஸ் வாழ்க்கையில் கேண்டிடேட்ஸ் தொடரில் பட்டம் வென்றது மிகப்பெரிய நிலை. இத்துடன் இந்தப் பயணம் முடிவ டையவில்லை. உலக சம்பியன் பட்டத்தை வென்றாலும் இந்தப் பயணம் முடிவடையப் போவது இல்லை. உலக சம்பியன்ஷிப் பட்டத்தை தாண்டியும் அதிக தூரம் பயணிக்க வேண்டி உள்ளது.

என இந்திய கிராண்ட் மாஸ்டரான டி. குகேஷ் தெரிவித்தார்.

17 வயது சென்னையைச் சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டரான டி. குகேஷ், கனடாவின் ரொரண்டோ நகரில் அண்மையில் நடந்து முடிந்த கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் பட்டம் வென்றதன் மூலம் உலக சம்பியன்ஷிப் பட்டத்தை வெல்வதற்கான ஆட்டத்தில் குகேஷ், சீனாவின் டிங் லிரனுடன் இந்த ஆண்டு இறுதியில் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில் டி. குகேஷ் தெரிவித்ததாவது.

கேண்டிடேட்ஸ் செஸ் தொடரை வென்றபோது உணர்ச்சிகள் அதிகம் இருந்தன. போட்டி முடிவடைந்து சில நாட்கள் ஆகிவிட்டதால் தற்போது சகஜமான நிலைக்கு வந்துவிட்டேன். எனது தந்தை மருத்துவர், தாய் நுண்ணுரியியலாளர். நான் மருத்துவர்கள் குடும்பத்தை சேர்ந்தவன் என்றாலும் எனக்கு செஸ் விளையாட்டின் மீதுதான் அதிக ஆர்வம். 7 வயது முதல் செஸ் விளையாடி வருகிறேன். சர்வதேச அளவில் செஸ் போட்டிகளில் விளையாடுவதால் 17 வயது இளைஞனாக எனது வாழ்க்கையில் நான் எதையும் தவறவிடவில்லை. - என்றார். (எ)



## உலகக் கிண்ண அரை இறுதிவரை இலங்கை அணி செல்ல வேண்டும்

### இதுவே என் இலக்கு என்கிறார் சமரி அத்தபத்து

கொழும்பு, ஏப். 26

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தான் ஓய்வு பெறுவதற்கு முன்னர் உலகக் கிண்ண அரை இறுதி வரை இலங்கை அணியை முன்னேற்றச் செய்வதே தனது இலக்கு என இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து தெரிவித்தார்.

பங்களாதேஷில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ. சி. சி. மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னோடியாக அபுதாபியில் தகுதிகாண் சுற்று நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. இந்நிலையிலேயே சமரி அத்தபத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“எனது தேசிய கிரிக்கெட் வாழ்க்கை ஆரம்பமானது முதல் இன்று வரை எதிர்பார்ப்புக்களை, இலக்குகளை நிறைவேற்றியுள்ளேன். இப்போது எனது இலக்கு அபுதாபியில் நடைபெறும் தகுதிகாண் சுற்றில் வெற்றிபெற்று உலகக் கிண்ண பிரதான சுற்றுக்கு இலங்கையைக் கொண்டுசெல்வதாகும்.

அங்கு உலகக் கிண்ண இறுதிவரை முன்னேறுவதே எனது இலக்காகும். அரை இறுதியை அடைந்துவிட்டால் எமது அணி பொறுப்புணர்வுடன் விளையாடி உலகக் கிண்ணத்தையும் வெல்லக்கூடியதாக இருக்கும்.- என்றார் சமரி அத்தபத்து. (எ)

## ஆசிய கனிஷ்ட மெய்வன்மை; மதுஷானிக்கு வெள்ளிப்பதக்கம்



டுபாய், ஏப். 26

ஐக்கிய இராஜ்ஜியத்தின் டுபாய் சர்வதேச விளையாட்டரங்கில் புதன்கிழமை ஆரம்பமான 21 ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையின் பெண்கள் அணித் தலைவி நெத்மிகா மதுஷானி ஹேரத் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

டுபாய் விளையாட்டரங்கில் இலங்கை நேரப்படி இரவு 9 மணிக்கு ஆரம்பமான பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியிலேயே மதுஷானி ஹேரத் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இம்முறை ஆகிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கைக்குக் கிடைத்த முதலாவது பதக்கம் இதுவாகும்.

மதுஷானி 13. 01 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இது அவர் பதிவு செய்த தனிப்பட்ட அதிசிறந்த தூரப் பெறுதியாகும்.

2014 ஆம் ஆண்டு ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் விதுஷா லகஷானி முப்பாய்ச்சிலில் பதக்கம் வென்ற பின்னர் இலங்கைக்கு இதே நிகழ்ச்சியில் கிடைத்த 2 ஆவது பதக்கம் இதுவாகும்.

அத்துடன் ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி வரலாற்றில் 1986 இலிருந்து இலங்கைக்கு கிடைத்த 36 ஆவது பதக்கத்தை மதுஷானி பெற்றுக்கொடுத்துள்ளார். (எ)

# காங்கிரஸ் இதுவரை இல்லாத அளவு மிகக் குறைந்த தொகுதிகளில் போட்டி: வெற்றிக்கான வியூகமா? பலவீனமா?



சல்மான் ரவி

அது 2009 மக்களவை தேர்தல். கடைசி முறையாக காங்கிரஸ் சிறப்பாக செயல்பட்ட தேர்தல் அது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் 440 வேட்பாளர்களை நிறுத்தியது. இதில் 209 இடங்களில் வெற்றி பெற்றது.

மக்களவையில் பெரும்பான்மைக்கு தேவையான எண்ணிக்கையை விட இது குறைவு. மத்தியில் ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீண்டும் அமைந்தது.

அதற்கு முன் 2004 மக்களவைத் தேர்தலில் 417 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 145 இடங்களை மட்டுமே பெற்றது. 1996 இல் காங்கிரஸ் அதிகபட்சமாக 529 இடங்களில் போட்டியிட்டது.

18-வது மக்களவைக்கான முதல் கட்டத் தேர்தலில் 102 தொகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த முறை காங்கிரஸ் 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகிக்கிறது

காங்கிரஸ் இதுவரை 301 இடங்களில் தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இறுதியாக அக்கட்சி 320 இடங்கள் வரையில் போட்டியிட வாய்ப்புள்ளது. 1951ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு குறைவான தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடுவது இதுவே முதல்முறை.

2014 தேர்தலில் 464 வேட்பாளர்களை நிறுத்திய காங்கிரஸ், 2019 தேர்தலில் 421 இடங்களில் போட்டியிட்டது. அதில் 52 இடங்களில் மட்டுமே அது வெற்றி பெற்றது.



### காங்கிரஸின் நிலை எப்படி இருக்கிறது?

இப்படிப்பட்ட சூழ்நிலையில் காங்கிரஸின் நிலை குறித்து கேள்விகள் எழுவது நியாயமானதே. பழம் பெரும் தேசியக் கட்சியான காங்கிரஸ் ஏன் இப்படிச் செய்ய வேண்டி வந்தது என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் காங்கிரஸ் அமைப்பு முற்றிலுமாக சிதைந்துவிட்டதாக அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். தற்போதைய நிலைமை அதே திசையைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

நீண்ட காலமாக காங்கிரஸை உன்னிப்பாக கவனித்து வரும் எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான ரஷீத் கித்வாய் "தற்போது காங்கிரஸ் தன்னை காப்பாற்றிக் கொள்ள போராடுகிறது" என்று தெரிவித்தார்.

"இந்த முறை மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியை குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடியை தன் சொந்த பலத்தில் எதிர்கொள்ளும் நிலையில் தான் இல்லை என்பதை காங்கிரஸ் புரிந்து கொள்ளத் தொடங்கியது. அதனால் காங்கிரஸ் பிராந்திய கட்சிகளையே அதிகம் நம்பியிருக்கிறது. ஒருவகையில் தியாக உணர்வுடன் காங்கிரஸ் இப்படி செய்திருக்கிறது என்றும் சொல்லலாம்," என்று அவர் குறிப்பிட்டார்.

"பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியை மட்டுப்படுத்த பிராந்தியக் கட்சிகளின் உதவியைப் பெறுவதைத் தவிர காங்கிரஸுக்கு வேறு வழி இருக்கவில்லை," என்று கித்வாய் தெரிவித்தார்.

இந்த முறை காங்கிரஸ் தனது வெற்றி இலக்கை மிகக் குறைவாகவே நிர்ணயித்துள்ளது. பாதி இடங்களையாவது வென்றால் அது அக்கட்சிக்கு பெரிய சாதனையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் பிராந்தியக் கட்சிகளுடன் காங்கிரஸின் கூட்டணி எந்த அளவுக்கு வலுவாக இருக்கும் என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.

"காங்கிரஸ், கூட்டணி அமைத்துள்ளது. ஆனால் அதனுடன் கூட்டு சேர்ந்துள்ள கட்சிகள் தத்தமது தேர்தல் அறிக்கைகளை கொண்டு வந்துள்ளன. அந்தக் கட்சிகள் காங்கிரஸின் தேர்தல் அறிக்கையை முழுமையாக உள்வாங்கவில்லை.

எனவே, காங்கிரஸின் இந்தியா கூட்டணிக்கு எந்த அளவுக்கு பலன் கிடைக்கும் என்பதை தேர்தல் முடிவுகள்தான் சொல்லும். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை இந்தியா கூட்டணியின் கூட்டு அறிக்கையாக இருந்திருக்க வேண்டும். இங்கும் காங்கிரஸின் குறி தவறிவிட்டது," என்று ரஷீத் கித்வாய் விளக்கினார்.

### பிராந்தியக் கட்சிகள் எத்தனை இடங்களில் போட்டியிடுகின்றன?

மக்களவையில் மொத்தமுள்ள 543 இடங்களில், சுமார் 200 இடங்களில் பாரதிய ஜனதா கட்சிக்கும், பிராந்தியக் கட்சிகளுக்கும் இடையே நேரடி போட்டி உள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இதிலும் காங்கிரஸுக்கு இதை விட சிறந்த வழி இருக்கவில்லை.

காங்கிரஸ் கட்சி அமைப்பு ரீதியாக வலுவிழந்து வருகிறது. அதாவது கடந்த ஐந்து ஆண்டுகளில் அக்கட்சியின் பெரிய மற்றும் சிறிய தலைவர்கள் ஒவ்வொருவராக பாரதிய ஜனதாவில் இணைந்தனர். இந்த நிலையில் காங்கிரஸுக்கு இதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை என்று மூத்த செய்தியாளர் என்.கே. சிங் கூறினார்.

என்.கே.சிங் தற்போது பல்வேறு மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். இதன்போது, பாக்டோக்ரா விமான நிலையத்தில் இருந்து தொலைபேசியில் பேசிய அவர் தகுதியான வேட்பாளர்களின் பற்றாக்குறையை காங்கிரஸ் கட்சி எதிர்கொண்டுள்ளது என்று கூறினார்.

"தற்போதைய சூழ்நிலையில் எல்லா தொகுதிகளிலும் போட்டியிட காங்கிரஸிடம் வேட்பாளர்கள் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிராந்தியக் கட்சிகளை ஆதரிப்பதும், அவர்களிடம் இருந்து ஆதரவைப் பெறுவதும்தான் அக்கட்சிக்கு இருந்த ஒரே வழி," என்று அவர் குறிப்பிட்டார்.



இந்த வரிசையில் உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், பிகார் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் கூட்டணியில் இடம் பெற்றுள்ள பிராந்திய கட்சிகளுக்கு காங்கிரஸ் அதிகபட்ச இடங்களை வழங்கியுள்ளது. உத்தரபிரதேசம், மேற்கு வங்கம், பிகார் மற்றும் தமிழ்நாட்டில் மட்டும் மொத்தம் 201 இடங்கள் உள்ளன. உத்தரபிரதேசத்தில் காங்கிரஸ் 20 அல்லது அதற்கும் குறைவான தொகுதிகளில் மட்டுமே போட்டியிடும்.

இதேபோல் மகாராஷ்டிராவில் உள்ள 48 தொகுதிகளில் காங்கிரஸ் 17 இடங்களிலும், உத்தவ் தாக்கரேவின் சிவசேனை 21 இடங்களிலும், ஷரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் 10 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

### காங்கிரஸின் பாதையை பாஜக பின்பற்றியதா?

"காங்கிரஸ் செய்வது அரசியலில் புதிதல்ல. ஏனென்றால் பாரதிய ஜனதாவும் இதை முன்னரே செய்திருக்கிறது. பல கட்சி கூட்டணியே, எதிர்கால அரசியலின் வடிவமாக இருக்கும்," என்று அரசியல் விமர்சகர் வித்யா பூஷண் ராவத் தெரிவித்தார்.

"அரசியலிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப்போது பிராந்தியவாதமும் அதிகரித்து வருகிறது. பிராந்திய லட்சியங்களும் அதிகரித்து வருகின்றன. தற்போதைய அரசியல் சூழல் நிறைய மாறப்போகிறது. வரும் ஆண்டுகளில் தேசிய கட்சிகளின் வாக்கு சதவிகிதமும் குறையும். வாக்குகளை பிரிப்பதற்கு பதிலாக பிராந்தியக் கட்சிகளுடன் வலுவான கூட்டணியை அமைப்பதே காங்கிரஸுக்கு சிறந்த தேர்வாக இருந்தது. அதையே தான் அது செய்துள்ளது. இதற்காக காங்கிரஸ் 200க்கும் மேற்பட்ட இடங்களை தியாகம் செய்துள்ளது," என்று அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தற்போது இருக்கும் சூழலில், குறைந்தபட்ச தொகுதிகளில் போட்டியிட்டு, பாஜக வேட்பாளருக்கு சவால் விடக்கூடிய வேட்பாளர்களை ஆதரிப்பதே அதன் அரசியல் எதிர்காலத்திற்கான சிறந்த வழி என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

தற்போது பாரதிய ஜனதா கட்சி எப்படி அரசியல் செய்கிறதோ, முன்பு காங்கிரஸும் அதைத்தான் செய்து வந்தது என்கிறார் ராவத். சினிமா நட்சத்திரங்களை களமிறக்குவது, மற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களை தங்கள் பக்கம் இழுப்பது போன்றவை இதில் அடங்கும்.

அமிதாப் பச்சன், சுனில் தத் மற்றும் ராஜேஷ் கன்னா ஆகியோரின் உதாரணங்களை மேற்கோள் காட்டிய அவர், அக்கால மூத்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக இந்த பெரிய சினிமா நட்சத்திரங்களை காங்கிரஸ் களமிறக்கியது என்று கூறினார்.

"முன்பு சமூகம் மற்றும் நிர்வாகத்துறையின் 'உயர் தட்டு" காங்கிரஸுடன் இருந்தது. இப்போது பாரதிய ஜனதா கட்சியுடன் அது இருக்கிறது. இந்த மக்களவை தேர்தலில் பிராந்திய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு எந்த அளவுக்கு சவால் கொடுக்க முடியும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். காங்கிரஸின் எதிர்காலமும் இதைப் பொருத்தே அமையும்," என்று ராவத் குறிப்பிட்டார்.

# இஸ்ரேலின் யூத பழமைவாத இராணுவ பிரிவு மீது தடை விதிக்க அமெரிக்கா திட்டம்!

**அல்ஹரேத் அல்ஹாப்ஷ்னேஹ்**



இஸ்ரேலிய ராணுவத்தில் உள்ள யூத பழமைவாத படைப் பிரிவான நெட்ஸா யெஹூதா (Netzah Yehuda) என்ற படைப் பிரிவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கத் திட்டமிடுவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதற்கு இஸ்ரேலிய அரசியல் வாதிகள் கோபமாக எதிர்வினையாற்றியுள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடந்ததாகக் கூறப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏக்சியோஸ் (Axios) செய்தி இணையதளம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவு அமலுக்கு வந்தால், ஓர் இஸ்ரேலிய ராணுவப் பிரிவின் மீது அமெரிக்க அரசு தடை விதிப்பது இதுவே முதல் முறையாக இருக்கும்.

இதுகுறித்து பதிலளித்த இஸ்ரேல் ராணுவம், நெட்ஸா யெஹூதா படை மீது 'அமெரிக்கத் தடைகள் பற்றி எதுவும் தெரியாது' என்று கடந்த ஞாயிற்றுக் கிழமை (ஏப்ரல் 21) கூறியது. மேலும், அந்தப் படை 'சர்வதேசச் சட்டத்தின் கொள்கைகளின்படி செயல்படும் ஒரு போர்ப் பிரிவு' என்றும் கூறியது.

“இது தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்பட்டால், அது மறுபரிசீலனை செய்யப்படும்,” என்று இஸ்ரேலிய ராணுவம் கூறியிருக்கிறது. மேலும், “எந்தவொரு அசாதாரணமான சம்பவம் நடந்திருந்தாலும் அதை நடைமுறை அளவிலும், சட்டத்தின் படியும் விசாரிக்கத் தொடர்ந்து பணியாற்றும்,” என்றும் கூறியது.

நெட்ஸா யெஹூதா மீது அமெரிக்கா தடை விதித்தால், அந்தப் பிரிவுக்கு அமெரிக்க ராணுவ உதவி அல்லது பயிற்சிகள் கிடைக்காது என அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனயர்களுக்கு எதிராக இந்தப் படைப்பிரிவு நடத்திய தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளின் முடிவுகளை அமெரிக்கா இஸ்ரேலிடம் பலமுறை கோரியதாக, இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய பொது ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.



**இஸ்ரேலின் காட்டமான எதிர்வினை**

அமெரிக்கத் தடைகள் குறித்த இந்தச் செய்தியறிக்கைகளுக்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கோபமாக எதிர்வினை ஆற்றியிருக்கிறார்.

இந்தத் தடைகள் அமலுக்கு வந்தால், அவை 'அபத்தத்தின் உச்சமாகவும், தார்மீக வீழ்ச்சியாகவும்' இருக்கும் என பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

இஸ்ரேல் அரசின் போர்க்குழு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், இந்த இஸ்ரேலிய ராணுவப் பிரிவின் மீது அமெரிக்கா தடைகளை விதிப்பது ஒரு 'ஆபத்தான முன்னுதாரணம்' என்று கூறினார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனுடனான ஒரு தொலைபேசி உரையாடலில், அமெரிக்கா இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

நெட்ஸா யெஹூதா படையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது, நடந்துவரும் போரின் போது 'இஸ்ரேலின் சட்டபூர்வமான நிலைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும்' என்று காண்ட்ஸ் கூறினார்.

“ராணுவப் படைப் பிரிவுகள் சர்வதேச சட்டத்தின் உத்தரவுகளுக்கு உட்பட்டவை என்பதால் அவற்றின் மேல் தடைகளை விதிப்பதற்கு எந்த நியாயமும் இல்லை,” என்று அவர் கூறினார்.

அமெரிக்கா பரிசீலித்துவரும் தடைகளுக்கு எதிர்வினையாற்றிய இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென்-க்விர், இஸ்ரேல் மூலம் பாலஸ்தீன அதிகார அமைப்புக்கு வழங்கப்பட்ட அனைத்து நிதியையும் பறிமுதல் செய்ய அழைப்பு விடுத்தார்.

பாலஸ்தீன வங்கிகளுக்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு அவர் இஸ்ரேலிய பிரதமருக்கு அழைப்பு விடுத்தார்.

**எதிர்ப்புக் குரல்கள்**

நெட்ஸா யெஹூதா படைப்பிரிவுக்கு எதிரான எந்தவொரு தடையும் “பாலஸ்தீன அதிகாரத்தில் இருக்கும் இஸ்ரேலின் எதிரிகளை ஆதரிப்பதாக” இருக்கும் என்று பென்-க்விர் கூறினார்.

இஸ்ரேலின் போர்க்குழு அமைச்சர் காடி ஐசென்கோட், நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது 'அடிப்படையில் தவறானது' என்று கூறினார்.



இஸ்ரேலிய நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச், இந்த நடவடிக்கை 'பைத்தியக்காரத்தனமானது மற்றும் பாலஸ்தீன அரசை உருவாக்கும் முடிவை இஸ்ரேல் மீது திணிக்கும் முயற்சி' என்று விவரித்தார்.

இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் யேர் லாபிட், “இஸ்ரேலிய அரசாங்கத்தின் சட்டவிரோத கொள்கை மற்றும் அரசியல் தோல்வியால் முதலில் பாதிக்கப்படுவது இஸ்ரேலிய ராணுவமும் அதன் தலைவர்களும்தான்,” என்றார். ஆனாலும் அவர் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் மீதான பொருளாதாரத் தடைகள் 'தவறானவை, தடுக்கப்பட வேண்டியவை' என்றார்.

ஆனால் இவை அனைத்திற்கும் எதிரான கருத்தைத் தெரிவித்த இஸ்ரேலிய தொழிலாளர் கட்சியின் தலைவரான மெராவ் மைகெலி, நெட்ஸா யெஹூதா படைப்பிரிவை கலைக்க அழைப்பு விடுத்தார். இப்படையின் 'மூர்க்கத்தனமான, ஊழல் மலிந்த' செயல்பாடுகள் 'பல வருடங்களாக அனைவருக்குக் தெரிந்ததே' என்றார்.

**'நெட்ஸா யெஹூதா' படைப்பிரிவில் இருப்பது யார்?**

இஸ்ரேலில் ராணுவ சேவை கட்டாயமாகும். ஆண்கள் சுமார் மூன்று ஆண்டுகளும், பெண்கள் இரண்டு ஆண்டுகளும் கட்டாய ராணுவச் சேவை செய்யவேண்டும்.

ஆனால், யூத மத நம்பிக்கையில் வேரூன்றிய பழமைவாத யூதக் குழுவினரான 'ஹரேடி யூத' சமுதாயத்தைச் சேர்ந்த பலரும் கட்டாய ராணுவச் சேவையில் சேர மறுக்கிறார்கள்.

ஏனெனில், அவர்கள் தோரா (ஹீப்ரு யூத பைபிளின் முதல் ஐந்து புத்தகங்கள்) மற்றும் மத புத்தகங்களின் விளக்கங்களை கற்றுக்கொள்வதில் தங்கள் நேரத்தை செலவிடுகிறார்கள், என்று தலைமை ராபி (யூத மதகுரு) யிட்சாக் யோசெப் கூறுகிறார்.

இருப்பினும், அனைத்து இளம் ஹரேடி யூதர்களும் மதக் கல்லூரியில் சேருவதில்லை. சிலர் தங்கள் மதக்கல்வி பாதிக்காததை உறுதி செய்துகொண்டு, சிறப்பு நிபந்தனைகளோடு ராணுவத்தில் சேர்கிறார்கள்.

கடந்த 1999-ஆம் ஆண்டு, 'நஹால் ஹரேடி' என்ற லாப நோக்கற்ற அமைப்பு செயல்படத் துவங்கியது. இதில் ஹரேடி யூத மதகுருக்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இஸ்ரேலிய ராணுவத்துடன் இணைந்து மதப்பள்ளிகளில் படிக்காத இளம் ஹரேடிகளுக்கு அவ்வமைப்பில் இடமளித்தனர்.

இந்த ஒத்துழைப்பின் விளைவாக ஆயிரக்கணக்கான ஹரேடி வீரர்களைக் கொண்ட நெட்ஸா யெஹூதா படைப் பிரிவு உருவாக்கப்பட்டது.

நஹால் ஹரேடி அமைப்பு, 'ஹரேடி ஆண்கள் தங்கள் ஹரேடி வாழ்க்கை முறையை சமரசம் செய்துகொள்ளாமல் இஸ்ரேலிய ராணுவத்தில் மதிப்புமிக்க பதவிகளில் பணியாற்ற உதவும் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கிறது,' என்று கூறுகிறது.

ஆனால், கடந்த சில மாதங்களில், ஹரேடி யூதர்களுக்கு கட்டாய ராணுவத்தில் சேவையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவது மற்ற இஸ்ரேலிய பொது மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.



**நெட்ஸா யெஹூதா தோன்றிய வரலாறு**

கடந்த 1999-ஆம் ஆண்டு, 30 ஹரேடி வீரர்களைக் கொண்ட முதல் படைப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஹரேடிகளை ராணுவத்தில் அறிமுகப்படுத்தும் யோசனையை முன்வைத்த பொதுமக்கள் அமைப்பின் பெயரால் இப்படை 'நஹல் ஹரேடி', 'நெட்சா யெஹூதா' அல்லது

(16ம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலின் யூத பழமைவாத...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

'பட்டாலியன் 97' என்று பெயரிடப்பட்டது.

இஸ்ரேலிய ராணுவம் முதல் ஹரேடி போர் படைப்பிரிவினை உருவாக்கி, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் பாலத்தீனப் பகுதியான மேற்குக் கரையில் இருக்கும் ரமல்லா மற்றும் ஜெனின் ஆகிய நகரங்களில் செயல்பட்டது. கடந்த 2019-ஆம் ஆண்டில், ஹீப்ரு செய்தித்தாளான 'யெடியோத் அஹ்ரோனோத்', இஸ்ரேலிய ராணுவம் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை ரமல்லாவிலிருந்து ஜெனினுக்கு மாற்ற முடிவு செய்ததாகத் தெரிவித்தது.

இந்த மாற்றம் 'தொடர் தோல்விகள்' அமல்படுத்தப்பட்டது என்று அச்செய்தித்தாள் தெரிவித்தபிறகு, ஒரு இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர், அம்மாற்றம் 'செயல்பாட்டுக் காரணங்களுக்காக' செய்யப்பட்டது என்று கூறினார்.

### நெட்ஸா யெஹூதா படையில் எத்தனை வீரர்கள் உள்ளனர்?

கடந்த 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்குக் கரையில் இருந்த நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை இஸ்ரேல் பட்டாலியனை இடம் மாற்றியது. ஆனாலும் இந்த மாற்றம் அப்படை வீரர்களின் நடத்தை காரணமாக இந்த மாற்றம் செய்யப்படவில்லை என்று இஸ்ரேலிய ராணுவம் கூறிவருகிறது.டிஅதிலிருந்து இப்படை இஸ்ரேலின் வடக்கில் இயங்கி வருகிறது. இந்த ஆண்டின் துவக்கத்தில், ஜெருசலேம் போஸ்ட் செய்தித்தாளின் ஓர் அறிக்கையின்படி, காஸாவில் நடக்கும் போரில் இந்தப் படைப்பிரிவு சண்டையிடத் தொடங்கியது.

லெபனான், சிரியா மற்றும் காஸாவில் நெட்சா யெஹூதா படையினரை உள்ளடக்கிய 'க்ஃபிர்' (முகசை) படை சண்டையிடும் என்று இஸ்ரேலின் முன்னாள் ராணுவத் தளபதி அவிவ் கொச்சாவி கூறினார்.

தற்போது, நெட்சா யெஹூதா படைப்பிரிவில் சுமார் 1,000 வீரர்கள் உள்ளனர். இவர்கள் பயிற்சியிலோ அல்லது போர்ப் பணியிலோ உள்ளனர்.



இந்தப் படைப்பிரிவின் வீரர்கள் இஸ்ரேல் ராணுவத்தில் மொத்தம் இரண்டு ஆண்டுகள் 8 மாதங்கள் பணியாற்றுகின்றனர்.

'டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல்' செய்தித்தாளின் அறிக்கையின்படி, இந்தப் படையின் ஆண் வீரர்கள், பெண் துருப்புகளுடன் தொடர்பு கொள்வதில்லை. மேலும் அவர்களுக்கு தொழுகை மற்றும் மதநூல்கள் படிப்பதற்கு கூடுதல் நேரம் கொடுக்கப்படுகிறது.

### அமெரிக்கா ஏன் பொருளாதாரத் தடை விதிக்க நினைக்கிறது?

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 79 வயதான பாலத்தீன-அமெரிக்கர் உமர் அசாத்தை நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் உறுப்பினர்கள் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அவர் ஒரு சோதனைச் சாவடி அருகே கைது செய்யப்பட்டார். ஆசாத்தின் குடும்பத்தினர், ராணுவ வீரர்கள் அவரது கைகளை மற்றும் வாயைக் கட்டி, தரையில் கிடத்தியதாகக் கூறினர். பின்னர் அவர் தரையில் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இச்சம்பவத்தை விசாரித்த இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள், இதனை "படைகளின் தார்மீக தோல்வி, அவர்களது தவறான முடிவு, மற்றும் மனித கண்ணியத்தின் மதிப்பை கடுமையாக பாதிக்கும் செயல்," என்று அறிவித்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் தளபதி கண்டிக்கப்பட்டார். அப்படையின் நிறுவனத் தளபதி மற்றும் சிப்பாய்களின் படைப்பிரிவு தளபதி பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஆனால், இப்படையின் வீரர்களுக்கு எதிரான குற்றவியல் விசாரணை அவர்களை விசாரிக்காமலேயே மூடப்பட்டது.



பாலத்தீன குடிமக்களுக்கு எதிரான பல வன்முறைச் சம்பவங்களில் அப்படையினர் ஈடுபட்டதையடுத்து, அமெரிக்க வெளியுறவுத்துறை 2022-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை விசாரிக்கத் துவங்கியது. இந்த விசாரணைகளில் உமர் அசாத் கொல்லப்பட்ட சம்பவமும் அடங்கும் என்று 'ஹாரெட்ஸ்' செய்தித்தாள் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி காஸா பகுதியை இஸ்ரேலிய ராணுவம் தாக்கத் துவங்கியதில் இருந்து, பாலத்தீனர்களுக்கு எதிராக நடந்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக, தனிப்பட்ட இஸ்ரேலிய குடியேற்றவாசிகளுக்கு எதிராக அமெரிக்கா மூன்று தடைகளை விதித்துள்ளது.

### அமெரிக்கா அமல்படுத்த விரும்பும் லேஹி விதிகள் என்றால் என்ன?

அமெரிக்க வெளியுறவுத்துறையின் கூற்றுப்படி, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்ட வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு அமெரிக்க உதவி செய்வதை லேஹி விதிகள் தடை செய்கிறது.

தடை செய்யப்பட்ட உதவி வகைகளில், அமெரிக்க பாதுகாப்புத் துறையின் பயிற்சித் திட்டங்களும் அடங்கும்.

இத்தகைய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அரசாங்கங்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட்டால், அமெரிக்க வெளிநாட்டு உதவி மீண்டும் துவங்கப்படலாம்.

லேஹி விதிகள் "வெளிநாட்டுப் படைப் பிரிவுகள் தீவிர மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டதுபற்றி நம்பத்தகுந்த தகவல் இருந்தால், அப்படைப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் நிதிக்கும் பொருந்தும்," என்று அமெரிக்க வெளியுறவுத்துறை கூறுகிறது.

அமெரிக்கா கொண்டுவர விரும்பும் விசாரணைகளில் அரசியல், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிற பிரச்சினைகளும் அடங்கும்.

அமெரிக்க அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் பொது மற்றும் ரகசியப் பதிவுகளை மதிப்பாய்வு செய்வர்.

அமெரிக்க அரசாங்கம் 'சித்ரவதை, சட்டத்தை மீறிய கொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படுவது மற்றும் சட்டத்தின் போர்வையில் நடத்தப்படும் பாலியல் வன்புணர்வு ஆகியவற்றை தீவிர மனித உரிமை மீறலாகக் கருதுகிறது. இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்படும்போது லேஹி விதிகள் அமலுக்கு வரும்.

1990-களின் பிற்பகுதியில் இந்தச் சட்டத்தை முன்மொழிந்த அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் பேட்ரிக் லேஹியின் நினைவாக இச்சட்டத்திற்கு பெயரிடப்பட்டது. ●

